Not for sale

செப்டம்பர் - அக்டோபர் 2014

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom




## அடிப்படையான சத்தியங்கள் பகுதி - 2

இந்த வார்த்தை மாம்சமானது • ஈடுபலி மற்றும் திரும்பக் கொடுத்தல்


மரித்தோரின் உயிர்த்தெழுதலும் நம்பிக்கையும் • தேவனுடைய புத்திரர்களாக

அழைக்கபடுதல் • அவருடைய பிரசன்னத்தின் வாக்குத்தத்தம் எங்கே?

தேவனுடைய பரதீசில் • போதனைகள் எந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது

அடிப்படையான சத்தியங்கள் பகுதி 2

# ஆதியிலே



அஸ்திபாரமே எந்த ஒரு கட்டிடத்தின் முக்கிய பகுதியாகும். இது நன்கு ஊன்றப்பட்டு, ஏற்றவிதத்தில் வடிவமைக்கப்பட்டு சரியாகக் கட்டப்பட்டிருந்தால், அந்தக் கட்டிடம் ஒரு நிலையான அஸ்பாரம் பெறும். பூமி அதிர்ச்சிகளும், புயல்களும் அந்தக் கட்டிடத்தைத் தாக்கினாலும், போடப்பட்டிருக்கும் உறுதியான அஸ்திபாரம் எல்லா சோதனைகளிலும் நிலைத்து நிற்கும். இப்படியாக, சரியான அஸ்திபாரத்தின் மேல் நம்முடைய கிறிஸ்தவ குணங்கள் கட்டப்படுவதின் முக்கியத்துவத்தை இயேசு வலியுறுத்துகிறார்.

"பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்" (மத். 7:24-25).

நம்முடைய வாழ்க்கையில் நம்முடைய விசுவாசம் சோதிக்கப்படும்போது, நீடிய பொறுமையோடு சகித்து, அவைகளில் வெற்றிபெற நம்முடைய கிறிஸ்தவ குணநலன்கள் தேவனுடைய சத்தியத்தின் மேல் கட்டப்பட்டிருக்க வேண்டும். இந்த ஹெரால்டு பிரதியில், தேவன் மேல் நம்முடைய விசுவாசம், அவருடைய இரட்சிப்பின் திட்டம் மற்றும் இயேசுவின் அடிச்சுவடுகளில் நம்முடைய நடைகளை வழி நடத்தக்கூடிய அடிப்படையான அஸ்திபாரமான சத்தியங்களை ஒன்றுக்குப் பின் ஒன்றாக நாம் நினைவுபடுத்துகிறோம்.

வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று நாம் நம்பக்கூடிய கருத்தை, "உம்முடைய வசனமே சத்தியம்" என்ற கட்டுரை விவரிக்கிறது. இது, வேதாகம வரலாறு. வேதாகமத்தின் நல்லொழுக்கக் கோட்பாடுகள் மற்றும் வேதாகம தீர்க்கதரிசன நிறைவேற்றல்களைத் துல்லியமாக ஆராய்கிறது.


"பிக் பேங்" கூற்றின் விஞ்ஞான கண்டுபிடிப்புகள், ஜீவனின் துவக்கம், அண்டை வெளியின் சிருஷ்டிப்பு, சூரியன் மற்றும் சந்திரனின் செயல்பாடுகள் மற்றும் ஆதியாகமத்தோடு இசைந்திருக்கும் தாவரங்கள் மற்றும் மிருகங்களின் சிருஷ்டிப்பைக் குறித்து, "பரலோகத்தையும், பூலோகத்தையும் சிருஷ்டித்த தேவன்"என்ற கட்டுரை விவரிக்கிறது.

நம்முடைய சிருஷ்டிகரின் குணம் மற்றும் கடந்தகால செயல்பாடுகளில் மனுக்குலத்தின் இரட்சிப்பிற்காக தேவனுடைய திட்டத்தில் அவருடைய நீதி, ஞானம், வல்லமை மற்றும் அன்பின் வெளிப்பாடுகளைக் குறித்து, "கர்த்தரே என் தேவன்" என்ற கட்டுரை ஆராய்கிறது. அடுத்து, மனுக்குலத்தை சிருஷ்டித்ததின் நோக்கம் தீமையை அனுமதித்ததின் வழியாக எப்படிப்பட்ட அறிவையும், அனுபவத்தையும் தேவன் மனுஷனுக்காகக் கொடுக்க விரும்பினார் என்றும், மனுஷனுடைய இரட்சிப்பிற்காக தேவனுடைய குமாரன் ஏன் மாம்சத்தில் வரவேண்டும் என்ற காரணத்தைக் குறித்தும், "ஒரு ஜீவ ஆத்துமா" என்ற கட்டுரை விவரிக்கின்றது. ஏதேன் தோட்டத்தில், ஆதாம் மற்றும் ஏவாள் தேவனுக்குக் கீழ்ப்படியாமற்போன காரணத்தையும், மீண்டும் மனுஷனுடைய இருதயம் ஜீவனைப் பெறக்கூடிய நிலைக்கு மறுரூபமாகும்படி தேவன் அனுமதித்த இந்த அனுபவங்களைக் குறித்து, "செத்துக்கொண்டே சாவாய்" என்ற கட்டுரை கருத்துக்களை முன் வைக்கின்றது. இறுதியாக, அனைவரும் "நித்திரை"யிலிருந்து எழுப்பப்படும் காரியத்தை மரணம் என்று வேதாகமம் எவ்வாறு விவரிக்கிறது என்பதை, "மரித்தோரின் நித்திரை" என்ற கட்டுரை மறு ஆய்வு செய்கிறது.

இந்தப் பிரதி மற்றும் இதை அடுத்துவரும் (செப்./அக். 2014) ஹெரால்டு பிரதியின் கட்டுரைகள், நம்முடைய விசுவாசத்தைப் பெலப் படுத்தி, நாம் அதிகமாக நேசிக்கும் அஸ்திபாரமான சத்தியங்களை இன்னும் தெளிவாகப் புரிந்து கொள் வதற்கு ஏதுவாய் இருக்கும் என்று நம்புகின் றோம்.

செப்டம்பர் / அக்டோபர் 2014


| | |
|---|---|
| **இந்த வார்த்தை மாம்சமானது** | 32 |
| கன்னியினிடத்தில் பிறப்பு | |
| **ஈடுபலி மற்றும் திரும்பக் கொடுத்தல்** | 36 |
| அஸ்திபாரமான சத்தியங்கள | |
| **மரித்தோரின் உயிர்த்தெழுதலும் நம்பிக்கையும்** | 39 |
| உயிர்த்தெழுதல | |
| **தேவனுடைய புத்திரர்களாக அழைக்கப்படுதல்** | 44 |
| பரம அழைப்பு | |
| **அவருடைய பிரசன்னதத்தின் வாக்குத்தத்தம் எங்கே?** | 47 |
| இரண்டாம் வருகை | |
| **தேவனுடை பரதீக** | 53 |
| கிறிஸ்துவின் இராஜ்யம் | |
| **போதனைகள் எந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது** | 58 |
| போதனைகள் | |
| **தீர்க்கதரிசனத்தில் இன்று** | 60 |



# இந்த வார்த்தை மாம்சமனது

"இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்" (மத். 1:23).

Larry Young

இயேசுவின் வாழ்க்கையைக் குறித்து, நமக்கு என்ன தெரியும்? வசனங்களின்படி அவர் பரலோகத்திலிருந்து இறங்கி வந்தார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஏனெனில், "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (யோவா. 1:1). என்று யோவான் கூறுகிறது. இந்த வசனத்தில், "வார்த்தை" என்ற சொல் லோ காஸ் என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாம். இதற்கு பேசப்பட்ட வார்த்தை என்று பொருள். மேலும், இவ்வார்த்தை நம்முடைய ஆண்டவராம் இயேசுவுக்குப் பிரயோகிக்கப்படுகிறது.

### நம்முடைய ஆண்டவர் மனுஷனாக வருவதற்கு முன்னிருந்த நிலை

தேவனுடைய சிருஷ்டிப்பில் நம்முடைய ஆண்டவர் முதன்மையானவர் என்று வெளி. 3:14-ம் வசனம் கூறுகிறது. மேலும், நம்முடைய ஆண்டவரைக் குறித்த சில விவரங்கள் நீதி. 8-ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. " கர்த்தர் தமது கிரியைகளுக்குமுன் பூர்வமுதல் என்னைத் தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார்..."நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன்; நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்தது, எப்பொழுதும் அவர் சமுகத்தில் களிகூர்ந்தேன்" (நீதி. 8:22, 30).

பரலோகத்தில் ஒரு பொறுப்புள்ள நிலையிலும் அதிக நம்பிக்கைக்குரிய பாத்திரமாக நம்முடைய லோகோஸ் ஆதியிலிருந்தே இடம் பெற்றிருந்தார் என்பதை வசனங்கள் குறிப்பிடுகின்றது. பிதாவின் சிருஷ்டிப்பில் அவர் முதன்மையானவர் மட்டுமல்ல, அவர் பிதாவின் எல்லா சிருஷ்டிப்பின் வேலைகளிலும் ஒருமித்து கிரியை செய்யக்கூடியவராக இருந்தார். "பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர்மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்" (1 கொரி. 8:6) என்று வசனம் குறிப்பிடுகிறது.

நம்முடைய மாபெரும் இரட்சகர் மாம்சத்தில் வருவதற்கு முன்னிருந்த நிலையைக் குறித்து அப். யோவான் ஒரு சுருக்கமான வாக்கியத்தைக் கூறுகிறார். "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" (யோவா. 1:3) என்று அவர் எழுதுகிறார். மற்றொரு வார்த்தையில் சொல்லப்போனால், பரலோகப் பிதாவின் கட்டளையின் படி, எல்லாவற்றையும் இயேசுவே நேரடியாக சிருஷ்டித்தார். அவரே நம்முடைய பரலோகப் பிதாவின் வார்த்தையாகவும், சகல சிருஷ்டிப்புகளுக்குக் காரணமாகவும் இருந்தார். அவர் சகலவிதமான, பிரமாண்டமான காரியங்களைச் சிருஷ்டித்திருந்தாலும் இயேசு தாமே பிதாவின் முதன்மையான நேரடி சிருஷ்டிப்பாகவும், மரித்தோரிலிருந்து எழும்புவதற்கு முதலானவருமாகவும் இருந்தார் (கொலோ. 1:15, 18).

### ஈடுபலியின் அவசியம்

அவருடைய பரலோக மகிமையை ஒதுக்கி வைத்துவிட்டு இந்த உலகத்தின் பாவங்களுக்காக தன்னுடைய மாம்ச சிந்தையை பலி செலுத்தும்படிக்கு இயேசுவை ஒரு மனுஷனாக பரலோகப் பிதா வரவேற்றார். மனுக்குலத்திற்காக அவர் நிறைவேற்ற வேண்டும் என்று பிதா தம்முடைய எண்ணத்தில் சிந்தித்தக் காரியம் செய்யப்படுவதற்கேற்ற காலம் வந்தபோது, சீர்பொருத்தலின் அந்த மாபெரும் வேலைக்கு ஒரு ஊழியக்காரனாகும் வாய்ப்பை பிதா இயேசுவுக்குக் கொடுத்தார்.

இயேசு, தம்முடைய பரலோக மகிமையைத் துறந்து, மனுஷனாக வருவதற்குரிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மாம்சமாக இந்த உலகத்திற்கு வந்த விவரத்தைக் குறித்து அப். பவுல் தெளிவாக விவரிக்கிறார். "தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்" (எபி. 2:9).

தேவனுடைய எல்லா விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்களும் ஆதாமுக்குப் பதிலாக இயேசு கொடுக்கக்கூடிய ஈடுபலியின் மேல் சார்ந்திருந்ததினால், இயேசு மனுஷனாக வந்த காரியம் மிகவும் கடினமாக இருந்தது. மேலும், "ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி" (சங். 49:7) என்று கூறப்படும் காரணம் என்ன?

வசனங்கள் கூறுகிற படி தந்தையாகிய ஆதாம், தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியக் கூடிய ஒரு பரிபூரண மனுஷனாக சிருஷ்டிக்கப்பட்டார். ஆதாம், தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டார். "பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்" (ஆதி. 1:26-27) என்று வசனங்கள் கூறுகிறது.

கீழ்ப்படியாமையினால் பாவத்திலும் மரணத்திலும் ஆதாம் விழுந்ததினிமித்தமாக அவருடைய சந்ததிகள் அனைவரும் விழுந்துபோன அபூரணர்களானார்கள். ஆதாம் மற்றும் அவருடைய சந்ததி மீண்டும் சீர்பொருந்தப்பட்டு, தம்முடைய சிருஷ்டிகரோடு இசைந்து பூரணமான ஜீவனைப் பெறுவதற்கு விழுந்துபோன ஆதாமின் நிலையைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு பூரண மனுஷன் தேவனுக்குத் தேவைப்பட்டார். ஆகவே, ஆதாமின் சந்ததியில் வந்த எவரும் பூரணமாக இராததினால் நம்முடைய ஆண்டவராம் இயேசு இந்த பூமிக்கு வந்து தம்முடைய பரிபூரண ஜீவனை ஆதாமுக்குப் பதிலாகக் கொடுத்தார் என்று ரோ. 5:19-ம் வசனம் கூறுகிறது. "அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப் பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப் படுவார்கள்."

**இயேசு மாம்சமானார்**

மனுஷனை இரட்சிப்பதற்காக தம்முடைய மனுஷ ஜீவனைக் கொடுப்பதற்கு பரலோக மகிமையையும், ஆவிக்குரிய இயல்பையும் மனப்பூர்வமாகத் துறந்து, இந்த அன்பான பலியை இயேசு செலுத்தினார். "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது" (1 தீமோ. 2:5-6) என்ற வசனங்கள் கூறுகிறது.

அனைவரைக் காட்டிலும் மனுக்குலத்திலுள்ள இயேசு ஒரு விசேஷித்த குழந்தையாகப் பிறக்க வேண்டியதாக இருந்தது. மனுக்குலத்தைக் காட்டிலும் ஒரு வேறுப்பட்ட முறையில் இந்த மனித குழந்தை பிறக்க வேண்டிய அவசியம் என்ன என்று நாம் கேள்வி எழுப்பலாம்.

இயேசு பூமிக்குரிய தகப்பனால் ஜெநிப்பிக்கப்படவில்லை என்று வசனங்கள் தெளிவாக விவரிக்கிறது. யோசேப்பு, மரியாளுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்தாலும் இயேசு, யோசேப்புக்குப் பிறக்கவில்லை. தெய்வீக வல்லமையினாலே அந்தக் குழந்தை விசேஷமாக மரியாளுக்குள் கருத்தரிக்கப்பட்டு அவள், "கன்னியாக" இருக்கும்போதே இந்தக் குழந்தையைப் பெற்றெடுத்தாள். "இயேசுகிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது" (மத். 1:18) என்று வசனம் கூறுகிறது.

இரட்சகர் பூரணமாக இராவிட்டால் இந்த உலகத்தை மீட்டிருக்க இயலாது. வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மீட்பானது, இயேசு பூரணமானவர் என்பதை உறுதிப்படுத்தியது. ஆதாம் பாவம் செய்வதற்கு முன்னிருந்த நிலமையில் இயேசு இருப்பார் என்று இது குறிப்பிடுகிறது. "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும்" (எபி. 7:26) என்று அப்போஸ்தலர் அறிக்கையிடுகிறார். இயேசு மனுக்குலத்தின் பாவநிலைகளிலிருந்து வேறுபட்டவராகக் காணப்பட வேண்டியதாக இருந்தது. ஆனால், எந்த ஒரு மனித தகப்பனும் பரிபூரண குழந்தையைப் பெற்றெடுக்க முடியாது. ஆகவே, வசனங்கள் கூறுகிறபடி, உன்னதத்திலிருந்து தேவன் தம்முடைய குமாரனை இந்த உலகத்தில் ஜெநிப்பிக்க வேண்டியதாக இருந்தது. ஆகவே, "கன்னியினிடத்தில்" பெற்றெடுக்கப்பட்ட இயேசு மனுக்குலத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டவரானார். அவருடைய ஜீவன் பூமிக்குரிய தந்தையிடமிருந்து அல்ல, பரலோகப் பிதாவிடத்திலிருந்து வந்ததாகும்.

**இயேசுவின் பிறப்பும், ஜீவனும்**

லூக். 2:8, 10-11 வசனங்களில், நாம் இயேசுவின் பிறப்பைக்குறித்து அறிந்துகொள்ளலாம். "அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள்

வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள்... தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்."

இரட்சகர் என்ற வார்த்தைக்கு ஒரு விசேஷித்த அர்த்தம் உள்ளது - மீட்கக்கூடியவர் அல்லது விடுதலையாக்குபவர். இதற்கு ஜீவனைக் கொடுப்பவர் என்று பொருள். "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத். 1:21) என்று வசனம் கூறுகிறது. இந்தப் பூமியிலுள்ள ஒவ்வொருவரும் மீண்டும் நித்தியமான ஜீவனைப் பெறுவதற்கான ஒரு வாய்ப்பைக் கொடுக்கக்கூடிய ஒரு இராஜாவை இந்த உலகம் பெற்றுக்கொள்ளும். "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரி. 15:22).

"பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது" (லூக். 2:40) என்று வசனம் கூறுகிறது. தேவன் குறித்த காலத்தில் ஒரு இரட்சகர் பிறந்து, ஒரு மனுஷனாக வளர்ந்து, பிதாவின் சித்தம் செய்வதற்கு தன்னையே தத்தம் செய்து, மூன்றரை வருடங்களாக தன்னுடைய ஜீவனை மனப்பூர்வமாகப் பலி செலுத்தினார். இறுதியாக, ஒரு கொடூரமான சிலுவை மரணத்தையும் அடைந்தார்.

### மனுஷனுடைய மீட்பரும் இராஜாவுமாகிய இயேசு

இன்று தேவனுடைய நீதியின் கோட்பாடுகளைக் குறித்து, மனுக்குலத்தின் புரிந்துகொள்ளுதல் குறைவாக உள்ளது. தேவனுக்குக் கீழ்ப்படியும்படியாக அவருடைய பிரமாணங்களை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இன்று காணப்படும் சர்ச்சைக்குரிய போதனைகள் மற்றும் பல்வேறு பட்ட மதங்களின் உபதேசங்களினால், மனுக்குலத்திற்கு ஏற்பட்ட குழப்பங்களை இயேசு நீக்கிவிடும் போது, அவர்கள் நீதியைக் கற்றுக்கொள்ள வழிநடத்தப்படுவார்கள். "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஏசா. 11:9). இயேசுவின் வருகையினிமித்தம் மனுக்குலம் தங்களுடைய இருதயத்திலும், சிந்தையிலும் பரிபூரண நிலையைப் பெற்று மீண்டும் தேவனோடு இசைந்து அவருக்குக் கீழ்ப்படிந்திருப்பார்கள்.

மனித குடும்பம் கல்லறையிலிருந்து அழைக்கப்பட்டு, சகலவிதமான வியாதிகளிலிருந்தும் சொஸ்தமாக்கப்படுவார்கள். "வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை; அதில்வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்" (ஏசா. 33:24). கீழ்ப்படிந்தவர்கள் பரிபூரண சுகத்தைப் பெற்று நித்திய ஜீவனைப் பெறுவார்கள். மனுக்குலம் மீண்டும் தேவனோடு நல்லுறவைப் பெறுவார்கள். ஆதாமுக்காக நம்முடைய ஆண்டவரின் மரிக்கக்கூடிய ஈடுபலி அவருடைய வெற்றிகரமான இராஜ்யத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது.

அவர் மனுஷனுடைய அபூரண நிலை, சுயநலம் மற்றும் கேடான ஆட்சிக்குப் பதிலாக தம்முடைய இராஜ்யத்தில் பரிபூரணமான ஆட்சியை ஸ்தாபிப்பார். இயேசுவின் பிறப்பைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவித்த போது, "கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்" என்றும் கூறினார் (ஏசா. 9:6-7).

### இயேசுவின் பின்னடியார்கள்

நீதியுள்ள வாழ்க்கையை வாழ்ந்து தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதினால் உபத்திரவப்பட்டு மரிப்பதற்கு மனப்பூர்வமாக தங்களை ஒப்புக்கொடுப்பவர்களை நம்முடைய பிதா இந்த தீமையான உலகத்திலிருந்து ஒரு விசேஷித்த வகுப்பாராக வெளிவரும்படி அழைக்கிறார். "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" (லூக். 12:32). சிறுமந்தையானவர்கள் இந்தத் தீமையான உலகத்தோடு என்றும் ஒத்துப்போவதில்லை. அவர்கள் நம்முடைய ஆண்டவரைப் போல மாறுவதற்கு அருமையாக முயற்சிக்கிறார்கள். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலி. 2:5). "இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலேநமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2 பேது. 1:4).

அவர்களின் விசுவாசத்தின் பலனாக இந்தச் சிறுமந்தை கிரீடத்தைப் பெற்றுக்கொண்டு நம்முடைய ஆண்டவரோடும் நம்முடைய பரலோகப்

பிதாவோடும் நித்தியமாக இருப்பார்கள். "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்தது போல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" (வெளி. 3:21). முழு மனுக்குலம் மகிழ்ச்சியடையும் படி சீர்பொருந்தும் வேளையில் ஆண்டவரோடு இந்தச் சிறுமந்தை வகுப்பார் உதவி செய்வார்கள். எவ்வளவு மகிமையான எதிர்காலம்! இவ்வனைத்தும் நம்முடைய ஆண்டவராம் இயேசு இந்தப் பூமிக்கு வந்து தன்னையே தாழ்த்தினதால் வந்த பலனாகும்.

**இயேசுவின் உள் நோக்கம்**


"அவருக்கு முன் வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தின் பொருட்டு இயேசு சிலுவையைச் சகித்தார்" என்று வசனங்கள் கூறுகிறது. "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" (எபி. 12:12). தேவனுடைய சித்தத்தைச் செய்வதிலும் எல்லா ஆத்துமாக்களையும் பிதாவின் இரட்சிப்பின் திட்டத்திற்குள் கொண்டு வருவதில் இயேசுவின் மகிழ்ச்சி அடங்கி இருந்தது (1 பேது. 1:9). இதில் இயேசு தோல்வியடைந்திருந்தால், உலக மனுக்குலம் இரட்சிப்பைப் பெற்றிருக்காது. இயேசுவும் தன்னுடைய ஜீவனை இழந்திருப்பார். ஆனால், இயேசு எல்லாவற்றிலும் வெற்றியடைந்ததினாலும், சிலுவையின் மரணப்பரியந்தம் கீழ்ப்படிந்திருந்ததினாலும் அவருக்குப் பரிசளிக்கப்பட்டது.

பூமிக்கு வந்து மனுக்குலத்திற்காக தம்முடைய ஜீவனைக் கொடுத்ததினிமித்தம் ஆண்டவராம் இயேசுவின் எப்படிப்பட்ட குணம் வெளிப்பட்டது? தேவன் மேல் அவர் வைத்திருந்த விசுவாசத்தையும் ஆவிக்குரிய நிலையிலிருந்து விட்டிறங்கி அவருக்குள் இருந்த தாழ்மையும் வெளிப்பட்டது. சிலுவையின் மரணபரியந்தம் பிதாவின் சித்தம் செய்வதில் அவருக்குள்ளிருந்த கீழ்ப்படிதல் வெளிப்படுத்தப்பட்டது. இவைகளனைத்தும் பிதாவின் மேலும், மனுக்குலத்தின் மேலும் இயேசு கொண்டிருந்த மிகுந்த அன்பை வெளிப்படுத்தியது. பிதாவின் குணங்களிலும், அவருடைய ஆளுகையின் கோட்பாடுகளின் மேலும் அவர் கொண்டிருந்த விசுவாசம் வெளிப்பட்டது.

"அல்லேலூயா, கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது" (சங். 106:1).

**அஸ்திபாரமான சத்தியங்கள்**

# ஈடுபலி மற்றும் திரும்பக் கொடுத்தல்



"எல்லாரையும் மீட்கும்பொருளாக" (1 தீமோ. 2:5-6). "எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும்" (அப். 3:21).

Joe Mezze

இந்த இரண்டு அடிப்படையான சத்தியங்களின் மகத்துவத்தை வேத மாணவர்கள் நீண்ட காலமாக அறிந்திருக்கிறார்கள்.

**ஈடுபலி**

உண்மையில் ஈடுபலி என்ற வார்த்தை வெகுசில வசனங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும், இந்த வசனங்கள் எவ்வளவு வல்லமையுள்ளது! அதில் ஒரு வசனமே (1 தீமோ. 2:5-6) நம்முடைய பாடத்தின் ஆதார வசனமாகும். "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது."

ஈடுகிரயம் என்ற வார்த்தையின் நவீன பயன்பாட்டில் எதிரிடையான பொருளைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. பிள்ளைகளைக் கடத்திச் செல்லக்கூடியவர்கள் அந்த பிள்ளைகளைத் திருப்பிக் கொடுப்பதற்கு அவர்கள் கேட்கக்கூடிய பணமே ஈடுகிரயம் என்று அழைக்கப்படுகிறது. ஆனால், வேதாகமத்தில் "ஈடுகிரயம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்கம் மற்றும் எபிரெய வார்த்தைகளுக்கு ஒரு விரிவான அர்த்தமுள்ளது. இந்த வேதப்பகுதியில் "ஆன்டி-லுட்ரான் " என்ற கிரேக்க வார்த்தைக் காணப்படுகிறது. இதற்கு "சரிநிகர் சமமான விலை" அல்லது "சம மதிப்புள்ள" என்று பொருளாகும்.

யாருக்காக? அல்லது எதற்காக? பூரண மனுஷனாகிய இயேசு, சரிநிகர் சமமான விலையானார்? இதுவரையில் வாழந்தவர்களில் ஆதாம் மட்டுமே பரிபூரண மனுஷனாக வாழந்தார். ஏதேன் தோட்டத்தில் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் தந்தையாகிய ஆதாம், தாம் பெற்றிருந்த பரிபூரண ஜீவனை அடகு வைத்தார். தேவனுடைய நீதியான தீர்ப்பின் கீழ் தன்னுடைய சொந்த ஜீவனை மட்டும் அல்ல, அவருடைய அனைத்து சந்ததிகளும் இவர் நிமித்தம் ஜீவனை அடகு வைத்தார்கள். இந்நாள் வரைக்கும் நாம் ஒவ்வொருவரும் அபூர்ணமான நிலையில் பிறந்திருக்கிறோம். ஆதாமைப் போல நாமும் பிறந்தது முதல் மரித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆயினும், தேவனுடைய திட்டத்தின் படி இயேசு தன்னுடைய பரிபூரண ஜீவனை மனப்பூர்வமாக ஆதாம் மற்றும் அவருடைய பிள்ளைகளுக்கும் சரிநிகர் சமமான விலையாகக் கொடுத்து மரணத்தீர்ப்பின் கீழ் இருக்கும் முழு மனுக்குலத்தையும் இரட்சிக்கக் கூடிய இரட்சகராக வந்தார். இயேசு சிலுவையில் மரித்த நோக்கமே ஈடுபலியைக் கொடுப்பதற்காக என்ற காரியத்தை உறுதிப்படுத்தும்படியாக மற்றொரு வசனத்திலும் ஈடுகிரயம் என்ற வார்த்தையைக் காணலாம். "அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்" (ஓசி. 13:14). "பாடா" (padah) என்ற எபிரெய வார்த்தை, ஈடுகிரயம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு ஒரு கிரயத்தைக் கொடுத்து மீட்கக்கூடிய என்று பொருள் - (யாத். 34:20-ம் வசனத்திலும் இதே எபிரெய வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது). கிரயத்தைக் கொடுத்து மனுக்குலம் மரணத்திலிருந்து மீட்கப்பட்டது அல்லது விடுவிக்கப்பட்டது என்று இங்குக் குறிப்பிடப்படுவதைக் காணலாம். இந்த அடிப்படையான சத்தியத்தைப் போதிக்கும் மற்றும் பல வசனங்கள் - யோபு 33:24-25; ஏசா. 35:9-10, 51:10; எரே. 31:11; ரோ. 5:12, 18 மற்றும் 1 கொரி. 15:22.

நம்முடைய பாடத்தின் ஆதார வசனத்தை நாம் பார்க்கும்போது, (1 தீமோ. 2:5-6) ஈடுகிரயத்தின் மற்றொரு முக்கியமான அம்சத்தைக் காணலாம். இயேசு அனைவருக்காகவும் தன்னை ஈடுபலியாகக் கொடுத்தார் என்று கூறுகிறது. "அனைவருக் காகவும்" என்ற வார்த்தையைக் கவனிக்கவும். சிலருக்காக மட்டுமல்ல, மரணத்தீர்ப்பிலிருந்து அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள். அதாவது, நீதியாக வாழ்ந்த சிலருக்கு மட்டுமல்ல, தவறாமல் சபைக்குச் சென்றவர்களை மட்டுமல்ல, இயேசுவைப் பற்றிக் கேள்விப்படாதவர்களும் கூட இந்த மீட்பைப் பெறுவார்கள். இயேசுவுக்கு முன் பிறந்தவர்களும், மரணத்தீர்ப்பிலிருந்து மீட்பைப் பெறுவார்கள். தேவனுடைய இராஜ்யத்தில் அனைவரும் உயிர்த்தெழுப்பப்படுவார்கள். எவ்வளவு அழகான அடிப்படை சத்தியம்!

இயேசு அனைவருக்காகவும் ஈடுகிரயத்தைச் செலுத்தினார் என்ற நிரூபணம் தொடர்ந்துவரும் வசனங்களில் காணப்படுகிறது. "நம்முடைய

இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோ. 2:3-4). இதைக் குறித்து யோசியுங்கள். சிலர் அல்லது பெரும்பான்மையானோர் அல்ல அனைவரும் இரட்சிக்கப் பட வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார். ஈடுபலியின் பலன்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என்றும் தேவன் விரும்புகிறார். அனைவரும் சத்தியத்தின் அறிவைப் பெறுவார்கள் - ஈடுபலி மற்றும் இந்த பிரதியில் விவரிக்கப்படும் மற்ற அடிப்படை சத்தியங்களையும் பெற்றுக்கொள்வார்கள்.

இப்போது ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. கொடுக்கப்பட்ட இந்த ஈடுபலி எப்போது முழுமையாகச் செயல்படுத்தப்படும்? முழு மனுக்குலம் எப்போது கல்லறையிலிருந்து விடுவிக்கப் படுவார்கள்? எப்போது இந்த முழு மனுக்குலம் சத்தியத்தின் அறிவைப் பெறுவார்கள்? "குறித்தகாலத்தில்" என்று நம்முடைய பாடத்தின் ஆதார வசனம் இதற்குப் பதில் அளிக்கிறது. முழு மனுக்குலம் நன்மைகளைப் பெறும்படிக்கு குறித்தகாலம் வைக்கப்பட்டிருக்கிறது. மேலும், "திரும்பக் கொடுத்தலின் காலம்" என்று இந்தக் குறித்தகாலத்தைப் பற்றி மற்றொரு வசனம் கூறுகிறது. "உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்" (அப். 3:21).

**திரும்பக்கொடுத்தல்**

ஒருவரின் ஏதோ உடைமைகளை மீண்டும் அவரிடம் திரும்பக்கொடுப்பதே "திருப்பிக் கொடுத்தல்" என்ற வார்த்தையின் பொருளாகும். கடந்த காலத்தில் திருடன் என்று நியாந்தீர்க்கப்பட்டவன், தான் திருடினப் பொருட் களைத் திரும்பக்கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றங்கள் தீர்ப்பிடும் அல்லது திருப்பப்பட்ட பொருட்களுக்குப் பதிலாக ஏதாகிலும் கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்ப்பிடுவார்கள். அதாவது, அந்தக் குற்றவாளி குற்றஞ்செய்வதற்கு முன்னிருந்த நிலைக்குத் திருப்பப்படுவதே இதன் பொருளாகும். இந்த ஒரு திரும்பக்கொடுத்தல் என்ற சிந்தைக்கு "சீர்பொருத்தப்படுதல்" என்ற ஒரு நவீன வார்த்தையும் பயன்படுத்தலாம்.

"அனைவருக்காகவும்" என்ற வல்லமையுள்ள வார்த்தையை மீண்டும் கவனிக்கவும். அப். 3:21-ம் வசனத்தில் இவ்வார்தையை இரண்டு முறைகள் காணலாம். மனுக்குலம் தொலைத்த அனைத்துக் காரியங்களையும் திரும்பப் பெற்றுக்கொள்ளும் என்று இந்த வசனம் கூறுகிறது. எந்தக் காரியங்கள்? பரிபூரணம், கீழ்ப்படியாமையினால் ஆதாம் தொலைத்த வியாதியற்ற வாழ்க்கை மேலும், பரிபூரணமான இந்தப் பூமியின் மேல் நித்தியமாக வாழக்கூடிய சிறப்புரிமை - இவ்வனைத்திற்கும் ஈடுகிரயம் செலுத்தப்பட்டது. இந்தப் பூமியின் மேல் வாழ்ந்த ஒவ்வொருவரும், மீண்டும் ஜீவனோடு இந்தப் பூமியில் கொண்டுவரப்பட்டு, பாவத்தைவிட்டு வெளியேறி நீதி, ஒழுக்கம் மற்றும் நேர்மையுள்ளவர்களாக சீர்பொருந்துவதற்கான வாய்ப்பு கொடுக்கப்படும். இதைக் கற்பனைச் செய்து பார்ப்பது கடினமாக இருந்தாலும், வரம்பெற்ற ஒரு எழுத்தாளர் இப்படியாக எழுதினார்.

"இந்தக் கொடூரமான துன்பங்கள் மற்றும் சீர் குலைவுகள் மற்றும் இந்நேரம் வரைக்கும் பாவத்தினால் ஏற்பட்ட விளைவுகளுக்கு உங்கள் கண்களை சற்று மூடி இனிவரும் மகிமையான பூமியை உங்கள் மனதில் தரிசியுங்கள். பாவத்தின் எந்தக் களைகளும் இந்தப் பரிபூரணமான சமுதாயத்தின் மேல் படராமலும் ஒரு கசப்பான வார்த்தைகளின்றி அன்பற்ற பார்வையோ வார்த்தையோ இல்லாமல் ஒவ்வொருவருடைய இருதயத்திலும் அன்பு தங்களுடைய இரக்கமுள்ள செயல்களினால் பூரணமாக வெளிப்படக்கூடியக் காரியங்களைப் பாருங்கள். இனி ஒருவரும் வியாதிப்படுவதில்லை. வேதனைப்படுவதில்லை, அழிந்துப்போவதுமில்லை - இப்படிப்பட்ட காரியங்களை எண்ணி அச்சுறுத்தப்படுவதுமில்லை.

"இதுவரையில், நீங்கள் காணாத புஷ்டியானதும், அழகுள்ளதும் மற்றும் ஆரோக்கியமான மனித ரூபங்களை சிந்தித்துப் பாருங்கள். பரிபூரணமான மனித இனம் நம்முடைய கற்பனைகளுக்கும் எட்டாத அளவுக்கு அழகுள்ளதாக இருக்கும். உள்ளத்தில் இருக்கும் பரிசுத்தம் சிந்தையிலும் கிரியைகளிலும் இருக்கும். பூரணநிலை எல்லாவிதங்களிலும் மகிமையை வெளிப்படுத்தும். பூமியில் காணப்படும் சமுதாயம் இப்படியாகவே இருக்கும். அனைவருடைய கண்ணீரும் துடைக்கப்படும்போது, சீர்பொருந்தும் வேலை நிறைவு பெற்றது என்று அறிந்துகொள்வார்கள்" (The Divine Plan of theAges, page 191).

மிகவும் நன்மையான இந்த ஒரு வாக்குத்தத்தம், உண்மையில் நிஜமாகும் என்று ஒருவரை நம்ப வைக்கும் போது, அப். 3:21-ம் வசனத்தில் காணப்படும், "அனைவருக்காகவும்" என்ற வல்லமையுள்ள வார்த்தையின் இரண்டாவது பயன்பாடாகக் காணலாம். ஏதேன் தோட்டத்தில் மனுக்குலம் தொலைத்த அனைத்தையும் திரும்பக்கொடுக்க வேண்டும் என்ற தேவனுடைய தீர்மானத்தை அவர் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் "அனைவரின்" வழியாகப் பேசினார்.

தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளைக்கொண்டு வாக்களித்திருக்கும் சீர்பொருந்தலின் வேலைக்கு இங்கு மூன்று எடுத்துக் காட்டுகள் முன் வைக்கப்படுகிறது :-

- "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்; வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும். வெட்டாந்தரை தண்ணீர்த்தடாகமும், வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும்; வலுசர்ப்பங்கள் தாபரித்துக் கிடந்த இடங்களிலே புல்லும் கொறுக்கையும் நாணலும் உண்டாகும்" (ஏசா. 35:5-6).

- "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஆபகூ. 2:14).

- "அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அறிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று" (மீகா 4:3:4).


இறுதியான ஒரு எடுத்துக்காட்டாக, எல்லா காரியங்களையும் திரும்பக்கொடுப்பதற்கான தேவனுடைய வாக்குத்தத்தங்களின் சாராம்சத்தைப் பொக்கிஷமாகக் கருதும் வேத மாணவர்கள் பெற்றிருக்கும் ஒரு வசனத்தைப் புதிய ஏற்பாட்டில் காணலாம். "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது" (வெளி. 21:4).

**அனைத்துக்** காரியங்களையும் திரும்பக் கொடுப்பதாக தேவன் அவருடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் அனைவரின் வாயினால் வாக்களித்திருப்பதால், "குறித்தகாலத்தில்" இவைகள் சம்பவிக்கும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. "உமது இராஜ்யம் வருவதாக" என்று ஜெபிக்கும்போது, இதைக் குறித்தே விண்ணப்பிக்கிறோம்.

**முடிவுரை**

அன்பு, நீதி, ஞானம் மற்றும் வல்லமை என்ற நான்கு முதன்மையான குணங்களைத் தேவன் பெற்றிருக்கிறார் என்று வசனங்கள் விவரிக்கிறது. தேவனுடைய அன்பிற்கும், நீதிக்கும் ஈடுபலி ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். தேவன் இந்த உலகத்தை மிகுதியாக நேசித்ததினால், தம்முடைய நீதியை நிறைவேற்றும்படியாக இந்த மனுக்குலத்தின் மேல் வந்த மரணத்தீர்ப்பை நீக்குவதற்கு அவருடைய ஒரே பேரான குமாரனைக்கொடுத்தார். திரும்பக்கொடுத்தலின் உபதேசத்தில் தேவனுடைய வல்லமையும், ஞானமும் செயலாற்றுவதை நாம் காணலாம். தேவனுடைய இராஜ்யம் இந்தப் பூமியில் முழுமையாக ஸ்தாபிக்கப்படும்பொழுது அவருடைய வல்லமை கல்லறையில் மரண நித்திரையிலுள்ள அனைவரையும் எழுப்பும். அதற்குப் பின் ஏதேன் தோட்டத்தில் தேவனுக்கு ஆதாம் கீழ்ப்படியாமையினால் தொலைத்த அனைத்தையும் திரும்பக் கொடுக்கக்கூடிய திட்டத்தில் அவருடைய ஞானம் வெளிப்படுத்தப்படும். அப்பொழுது நித்தியமாக பரிபூரண பூமியில் அனைவரும் பரிபூரண ஜீவனைப் பெற்றிருப்பார்கள் - எவ்வளவு மகிமையுள்ள அடிப்படையான சத்தியங்கள்!

# மரித்தோரின் உயிர்த்தெழுதலும் நம்பிக்கையும்



"மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பதைக்குறித்து, இன்று உங்களாலே நியாயந்தீர்க்கப்படுகிறேன்" (அப். 24:21).

Robert Goodman

உயிர்த்தெழுதல் வேதாகமத்தின் ஒரு மையக் கருத்தாகும். இதை ஒரு போதனையாக அப். பவுல், எபி. 6:2-ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். மரித்தோர் மீண்டும் உயிர்வாழ்வார்கள் என்ற நம்பிக்கை வேதாகமம் முழுவதிலும் காணப்படுகிறது.

உயிர்த்தெழுதல் ஏன் அவசியமாக உள்ளது? "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரி. 15:21-22) என்று வாசிக்கிறோம். சிலர் மட்டுமல்ல, அனைவரும் உயிரடைவார்கள். இந்த ஒரு முழு மனுக்குலமும் சீர்பொருந்திட உயிர்த்தெழுதல் ஒரு செயலாற்றமாக உள்ளது.

"அனஸ்தாசிஸ்" என்ற கிரேக்க வார்த்தை உயிர்த்தெழுதல் என்று வேதாகமத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு, "எழுந்திருத்தல்" அல்லது "எழுவது" என்று பொருள். "உயிர்த்தெழுதல்" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் அதிகமாகக் காணப்படுகிறது. ஆனால், பழைய ஏற்பாடு, உயிர்த்தெழுதலைப் பற்றிப் போதிக்கிறதா?

### பழைய ஏற்பாட்டில் உயிர்த்தெழுதல்

உயிர்த்தெழுதலின் கருத்து பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. "நீர் மனுஷரை நிர்த்தூளியாக்கி, மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறீர்" (சங். 90:3) என்று சங்கீதம் கூறுகிறது. மேலும், "கர்த்தர் கொல்லுகிறவரும் உயிர்ப்பிக்கிறவருமாயிருக்கிறார்; அவரே பாதாளத்தில் இறங்கவும் அதிலிருந்து ஏறவும் பண்ணுகிறவர். கர்த்தர் தரித்திரம் அடையச்செய்கிறவரும், ஐசுவரியம் அடையப்பண்ணுகிறவருமாயிருக்கிறார்; அவர் தாழ்த்துகிறவரும் உயர்த்துகிறவருமானவர். அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடு உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்; பூமியின் அஸ்திபாரங்கள் கர்த்தருடையவைகள்; அவரே அவைகளின்மேல் பூச்சக்கரத்தை வைத்தார்" (1 சாமு. 2:6-8) என்றும் கூறப்படுகிறது.

மனுஷன், ஜீவன் மற்றும் மரணம் என்ற சுழற்சிக்குள் அகப்பட்டிருக்கிறான். ஆயினும், தேவன் அவர்களைத் தூக்கிவிடுவார் என்று அவரே வாக்களித்திருக்கிறார். "கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி," (ஏசா. 35:10) என்று ஏசாயா கூறுகிறார். மனுஷர் புழுதியிலிருந்து திரும்பக்கூடிய ஒரு அற்புதமானக் காலத்தைக் குறித்து இந்த வசனம் பேசுகிறது. "பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்" (தானி. 12:2) என்று சொல்லப்பட்டிருக்கிறது. மனுஷனை மீண்டும் ஜீவனுக்குள் கொண்டுவருவார் என்று தேவன் வாக்களித்திருக்கிறார்.

மரணத்திலிருந்து மீண்டும் எழும்புதல் என்ற எதிர்பார்ப்புகளை யோபு உறுதிபடுத்துகிறார். "நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து, உமது கோபம் தீருமட்டும் என்னை மறைத்து, என்னைத் திரும்ப நினைக்கும்படிக்கு எனக்கு ஒரு காலத்தைக் குறித்தால் நலமாயிருக்கும். மனுஷன் செத்தபின் பிழைப்பானோ?... என்னைக் கூப்பிடும், அப்பொழுது நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன் " (யோபு 14:13-15). ஆண்டவர் அழைக்கும் போது, மனுஷர் கல்லறையிலிருந்து எழும்பி வந்து பதில் அளிப்பார்கள். இக்காரியத்தை யோபு அதிகமாக விசுவாசித்ததினால் அவருடைய உபத்திரவங்கள் கடந்து செல்லும் வரையில் தன்னை கல்லறையில் மறைத்து வைக்கும்படி தேவனிடம் வேண்டினார்.

பழைய ஏற்பாட்டில் உயிர்த்தெழுதலைப் பற்றி மற்றொரு சித்திரம் காணப்படுகிறது. "கட்டுண்டவர்களைக் கர்த்தர் விடுதலையாக்குகிறார்" (சங். 146:7). மேலும், "கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார் ... கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்" (ஏசா. 61:1) என்று வாசிக்கிறோம். ஆகவே, மரணத்திலிருப்பவர்கள் விடுதலையாக்கப்படுவார்கள் என்று வேதாகமத்தின் அடிப்படையில் நமக்கு நம்பிக்கை உண்டு.

"அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்; மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே?" (ஓசி. 13:14) என்று ஓசியா கூறுகிறார். ஓசியாவின்

வார்த்தைகளை பவுல், கொரிந்தியர்களுக்கு எழுதின நிருபத்தில் கோடிட்டுக் காட்டுகிறார். "மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது. மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (1 கொரி. 15:54-57) என்று அவர் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கிறார். இவைகள் எப்படி சம்பவிக்கும்? "நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் வழியாக."

**உயிர்த்தெழுதலில் மனுஷனுடைய மனது சீர்பொருந்தல்**

பிறப்பதற்கும், உயிர்த்தெழுப்பப்படுவதற்கும் உள்ள வேறுபாடு என்ன? உயிர்த்தெழுதலின் போது, மனுஷனுடைய சிந்தனைக்கு ஏற்ற சரீரத்தை தேவன் தேர்வு செய்து அவனுக்குக் கொடுப்பார். உயிர்த்தெழுதலின் போது, மனுஷனுடைய சிந்தனை அவனுக்குத் திரும்ப ஏன் கொடுக்கப்பட வேண்டும்? கொடுக்கப்படா விட்டால் அவன் ஒன்றும் அறியாத குழந்தையைப் போலிருப்பான். உயிர்த்தெழுப்பப்படும் சரீரத்தில் கடந்த கால வாழ்க்கையின் அனுபவங்களை மீண்டும் பெறுவது, விலையேறப் பெற்றக் காரியமாகும். ஏனெனில், ஒருவர் பாவத்தின் அனுபவங்களைப் பெற்றிருந்தால் மட்டுமே கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தில் கிடைக்கப் போகிற நீதியான ஆசீர்வாதங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியும். அப்பொழுது, இந்தப் பூமியில் வாழ்ந்த அனைவரின் மனதையும், சிந்தையையும் சீர்பொருத்தும் அந்த ஆச்சரியமான அருஞ் செயலை தேவன் நிறைவேற்ற முடியும்.

தேவனுடைய அதிகக் கவனத்துடன் அற்புதமான தீட்டப்பட்ட திட்டங்களில் உயிர்த்தெழுதல் ஒரு முழுமையானப் பகுதியாக உள்ளது. "மரமானது தெற்கே விழுந்தாலும் வடக்கே விழுந்தாலும், விழுந்த இடத்திலேயே மரம் கிடக்கும்" (பிர. 11:3) என்று வாசிக்கிறோம். ஒரு மரம் விழுந்தால், அது விழுந்த நிலையில் கிடக்கும். அதுபோல, ஒரு மனுஷன் உயிர்த்தெழுப்பப்படும் வரைக்கும் அவன் மரித்த நிலையில் இருப்பான் என்பது தெளிவாகிறது. நீதியுள்ள வாழ்க்கையை வாழ்ந்தவர்கள், நீதியுள்ள சிந்தையோடு எழுந்திருப்பார்கள். துன்மார்க்கனாக மரித்தவர்கள் அதே சிந்தையோடு எழுந்திருப்பார்கள். சோதோம் கொமோரா பட்டணத்தின் ஜனங்கள் மேலும் பாவத்தில் அமிழ்ந்து சீர் கெட்டுப் போய் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அவர்களை உயிர்த்தெழுப்புவதற்கு இயலாமல் போய்விடக் கூடாது என்ற காரணத்தினால் தேவன் அந்த பட்டணத்தை அழித்தார்.

தேவன் மனுஷனுடைய சிந்தையை திரும்பக் கொடுக்க முடியுமா? "தேவன் மனுஷனுடைய ஆத்துமாவைப் படுகுழிக்கு விலக்குகிறதற்கும், அவனை ஜீவனுள்ளோரின் வெளிச்சத்தினாலே பிரகாசிப்பிக்கிறதற்கும், அவர் இவைகளையெல்லாம் அவனிடத்தில் பலமுறை நடப்பிக்கிறார்" (யோபு 33:29-30) என்று வாசிக்கிறோம். ஜீவனுள்ளோரின் வெளிச்சம் என்ன? இதுவே மனுஷனுடைய சிந்தை. மனுஷன் உயிர்த்தெழுப்பப்படும் போது, அவனுடைய சிந்தை திரும்பக் கொடுக்கப்படும் என்று யோபு கூறுகிறார்.

உயிர்த்தெழுதலில் சிந்தை திரும்பக் கொடுக்கப்படும் என்ற கோட்பாட்டை எடுத்துக் காட்டுவதற்கு விதைப்பு மற்றும் அறுவடையின் காரியங்கள் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "அநியாயத்தை உழுது, தீவினையை விதைத்தவர்கள், அதையே அறுக்கிறார்கள்" (யோபு 4:8) என்று நாம் வாசிக்கிறோம். நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்வோம் என்ற பாடம் இதில் அடங்கியுள்ளது. இந்தத் தீமையான உலகத்தில் துன்மார்க்கன் செழிப்பது போல தோன்றலாம். ஆனால், இந்தத் தீமையான சிந்தையோடு கல்லறைக்குச் செல்லக் கூடியவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் தேவனைப் போல குணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகமாகப் பிரயாசைப்பட்டு கிரியை செய்ய வேண்டியதாக இருக்கும்.

**உயிர்த்தெழுதலுக்கான நம்பிக்கை மற்றும் உத்தரவாதம்**

நம்முடைய உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக்கு அடிப்படையாக இருப்பது என்ன? "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரி. 15:20-22) என்று வாசிக்கிறோம். இயேசுவுக்குப் பின் மரணத்தில் நித்திரை செய்யும் அவருடைய சீஷர்கள் முதற்பலனாக உயிர்த்தெழுப்பப்படுவார்கள். இயேசு திரும்பி வந்த போது உயிர்ப்பிக்கப்பட்டார்கள். அதற்குப் பின் கிறிஸ்துவின் பிரசன்னத்தில் மனுக்குலம் படிப்படியாக உயிர்ப்பிக்கப்படுவார்கள். காலப்போக்கில் இந்த உலகத்தில் வாழ்ந்த அனைவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். இப்படியாக, இதுவரை வாழ்ந்த அனைவரும் உயிர்ப்பிக்கப் படுவார்கள். மரித்தவரின் உயிர்த்தெழுதலைப் பற்றி இது ஒரு அற்புதமான செய்தியாகும்.

பவுல் வாழ்ந்த காலத்தில் சில மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லை என்று கூறினார்கள். ஆனால், அவர்களின் வற்புறுத்தலுக்கு பவுல் சரியாக

பதிலளித்தார். "கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப்பட்டிருக்க, மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்? மரித்தோரின் உயிர்ததெழுதலில்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே. கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சிசொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே." (1 கொரி. 15:12-19).

உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் நம்முடைய விசுவாசம் பயனற்றதாக இருக்கும். "மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே." உயிர்த்தெழுதலைப் பொறுத்த வரையில் நம்முடைய விசுவாசம் ஒரு இக்கட்டான நிலையில் உள்ளது என்று பவுல் கூறுகிறார். பாவத்திற்காக இயேசுவின் பலி அங்கீகரிக்கப்பட்டு அனைவரும் உயிர்த்தெழுப்படுவார்கள் என்பதற்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தேவனுடைய முத்திரையாக இருந்தது.

### வித்தியாசமான உயிர்த்தெழுதல்கள்

மரித்தோர் தற்காலிகமாக உயிர்த்தெழுந்த பல அற்புதங்கள் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், நித்தியமான உயிர்த்தெழுதலில் இதைக் காட்டிலும் மிகப்பெரிய காரியங்கள் நடக்கும் என்று இவைகள் நிழலாக எடுத்துக் காட்டுகிறது. மரித்தோரை உயிரோடு எழுப்ப தேவன் வல்லமையுள்ளவர் என்பதை இவைகள் எடுத்துக் காட்டியது. "தேவன் மரித்தோரை எழுப்புகிறது நம்பப்படாத காரியமென்று நீங்கள் எண்ணுகிறதென்ன?" (அப். 26:8) என்று கூறுகிறார். பிதாவாகிய தேவன் மாம்சத்திலிருந்து ஒருவரை ஆவிக்குரிய நிலைக்கு உயிர்த்தெழுப்ப வல்லமையுள்ளவர் என்பதை இயேசுவின் உயிர்த்தெழுதல் நிரூபித்தது. "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்" (பிலி. 2:9-10).

இரு வகுப்பார் உயிர்த்தெழுப்பப் படுவார்கள், இவர்களைப் பவுல் தெளிவாக அடையாளப்படுத்துகிறார். "நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கைகொண்டிருக்கிறதுபோல, நானும் நம்பிக்கைகொண்டிருக்கிறேன்" (அப். 24:15). கிறிஸ்துவின் மணவாட்டியாக நீதிமானாக்கப்பட்ட சபை யை நீதிமான்கள் என்றும், உலக மனுக்குலத்தை அநீதியுள்ளவர்கள் என்றும் குறிப்பிடப்படுகிறது. "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவா. 5:28-29) என்று வசனங்கள் விவரிக்கிறது. மேலும், இது பரலோகம் மற்றும் பூமிக்குரிய உயிர்த்தெழுதல்களைப் பற்றி விவரிக்கிறது. கீழ்க்காணும் அட்டவணையில் பரலோகம் மற்றும் பூமிக்குரிய உயிர்த்தெழுதல்களின் விவரங்களைக் காணலாம்.



**பரலோக உயிர்த்தெழுதல்**

பரலோக உயிர்த்தெழுதல் இருப்பது ஏன்? "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" (கொலோ. 1:27) என்று வாசிக்கிறோம். அவர் மணவாட்டியின் மகிமையை விவரிக்கிறார். மேலும், "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்" (மத். 25:31) என்றும் வாசிக்கிறோம். மகிமையடைந்த சபையைப் பற்றி இங்குப் பேசப்படுகிறது. இவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் பரலோகம் செல்வார்கள் (வெளி. 20:4-6). பரலோக உயிர்த்தெழுதலைக் குறித்து கீழ்க்காணும் அட்டவணை வசனங்கள் குறிப்பிடுகிறது.

**முதலாம் உயிர்த்தெழுதலின் வெற்றி அடைந்தோர்**

மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிரு அப்போது ஜீவ கிரீடத்தை பெறுவாய்

அழிவுள்ளவர்களாக மாம்சத்தில் விதைக்கப்பட்டவர்கள் – அழியாமையாக எழுப்பப்படுவார்கள்

மாம்ச சிந்தை விதைக்கப்பட்டவர்கள் – ஆவிக்குரிய சரீரமாக எழுப்பப்படுவார்கள். (1கொரி 15:53)

பலவீனத்தில் விதைக்கப்படும் – வல்லமையில் எழுப்பப்படும் (1கொரி 15:43)

கனவீனத்தில் விதைக்கப்படும் – மகிமையில் எழுப்பப்படும் ( 1கொரி 15:42)

கெட்டுப்போனதாக விதைக்கப்படும் – அழியாமையுள்ளதாக எழுப்பப்படும் (1கொரி 15:42)

தேவன் பிரியப்படும் சரீரத்தை அவர் அவர்களுக்கு கொடுப்பார் (1கொரி 15:38)

ஆதாமின் மரணத்திற்குள் அனைவரும் மரிக்க வேண்டும் (1கொரி 15:36)

"அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாத படிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" (எபி. 11:40)என்று வாசிக்கிறோம். சபை முதலில் உயிர்த்தெழ வேண்டுமென்று இது காட்டுகிறது. அப்போது மீதியிருக்கும் மனுக்குலத்தை மரண சிறையிலிருந்து விடுதலை செய்வதற்கு இவர்களும் உதவி செய்வார்கள்.


**பூமிக்குரிய உயிர்த்தெழுதல்**

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் நோவா போன்ற முற்பிதாக்கள் "மேன்மையான உயிர்த்தெழுதலைப்" பெறுவார்கள். "இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும்; வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள். ... வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்" (எபி. 11:39, 35) என்று எபிரெயர் கூறுகிறது. சபை உயிர்த்தெழுந்த பின்பும் உலகம் உயிர்த்தெழுவதற்கு முன்னும் இவர்கள் உயிர்த்தெழுப்பப்படுவார்கள். அவர்கள் முன்னதாகவே நீதிமான்களாக்கப்பட்டதினால், பரிபூரணமாக உயிர்த்தெழுவார்கள். அவர்கள் அனைவரும் விசுவாசத்தில் மரித்து கிறிஸ்துவின் இராஜ்யத்தில் பூமிக்குரிய பிரபுக்களாக இருப்பதற்கு முன்னதாக தங்களை நிரூபித்து விட்டார்கள். இவர்கள் அனைவரும் "பூமியின் மேல் பிரபுக்களாக இருப்பார்கள்" (சங். 45:16).

அடுத்து, பூமிக்குரிய உயிர்த்தெழுதலில் எழும்பக்கூடிய மனுக்குலத்தைப் பற்றி யோவான் விவரிக்கிறார். "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவா. 5:28-29). இங்கு, "ஆக்கினை" என்ற வார்த்தை தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதற்கு "கிரைசிஸ்" என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் பொருள் என்ன? தேவ சித்தம் செய்வதா? அல்லது சுய சித்தம் செய்வதா? என்று முடிவெடுப்பதே இதன் பொருளாகும். உயிர்த்தெழுப்பப்பட்ட மனுக்குலம் தங்களுடைய சுய விருப்பத்தைப் பின் வைத்து, பூமிக்குரிய பூரண நிலையில் பிதாவின் சித்தத்தைத்

தழுவ வேண்டும். சுய சித்தம் செய்பவர்கள் இரண்டாம் மரணத்தை அடைவார்கள். தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாகத் தங்களை ஒப்புக் கொடுத்தவர்கள் நித்திய ஜீவனுக்கு வழி நடத்தப்படுவார்கள். யோசுவாவும் இதே கருத்தை பொருள்படுத்தினார். "கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள் " (யோசு. 24:15). கீழ்க் காணும் அட்டவணையில் பூமிக்குரிய உயிர்த்தெழுதலின் வசனங்களின் வரிசையைக் காணலாம்.

**உயிர்த்தெழுதலின் நியாயத்தீர்ப்பு**




இந்த பூமிக்குரிய உயிர்த்தெழுதலின் செயல்பாடுகள் எவ்வளவு காலம் செல்லும் என்று நிச்சயமாக சொல்ல முடியாது. கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஆனால், நீதியைக் கற்றுக்கொள்வதற்கு ஒவ்வொருவருக்கும் நூறு வருடங்கள் கொடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஆகவே, கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியின் போது பூமிக்குரிய உயிர்த்தெழுதல் 900 வருடங்கள் வரைக்கும் நடக்கலாம்.


**முடிவுரை**

மரணம் இல்லாமல் அனைவரும் பரிபூரண நிலையை அடையும்பொழுது, உயிர்த்தெழுதலின் வேலை முற்றிலுமாக முழுமைப் பெறும். அதற்குப் பின் அனைத்து மனுக்குலமும் பரிபூரணமான பூமியின் நித்தியமான ஜீவனைப் பெறுவார்கள். இனி மரணமும் இராது, அழுகையும் இராது (வெளி. 21:4).

வேதாகமத்தில் உயிர்த்தெழுதல் ஒரு முக்கியமான சத்தியமாகும். ஆனால், அநேக கிறிஸ்தவர்கள் அதன் முக்கியத்துவத்தை அறியாதிருக்கிறார்கள். இருப்பினும், இராஜ்யத்தின் சுவிசேஷத்தை இந்த ஒரு பகுதி (உயிர்த்தெழுதல்) புரிந்துகொள்வதற்கு மிகவும் கடினமானது. உயிர்த்தெழுதலின் செய்தியை இந்த உலகத்திற்கு அறிவிப்பது நாம் பெற்ற சிறப்புரிமையாகும். நமக்கு உயிர்த்தெழுதலை அளிக்கும்படிக்கு கிறிஸ்து தம்முடைய ஜீவனைக் கொடுத்தார். உங்களுக்கு இது எவ்வளவு முக்கியமானது?

உன்னதமான அழைப்பு

# தேவனுடைய புத்திரர்களாக அழைக்கப்படுதல்



Larry McClellan

"இப்படியிருக்க, **பரம அழைப்புக்குப்** பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்" (எபி. 3:1).

நான் மருத்துவராகவோ, ஆசிரியராகவோ, செவிலியராகவோ "அழைக்கப்பட்டேன்" என்று எந்த ஒரு மனுஷனாவது தம்முடைய வேலையைக் குறித்து சொல்லியிருப்பதை நீங்கள் கேட்டதுண்டா? மற்றொரு வார்த்தையில் சொன்னால், இந்த வேலைக்காக நான் அழைக்கப்பட்டேன் என்று ஒருவர் சொன்னால், மனுக்குலத்திற்கு சேவை செய்வதற்காக தேவன் இவர்களை அழைத்தார் என்று பொருள்படும். "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த **பரம அழைப்பின்** பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலி. 3:14) என்று வேதாகமம் ஒரு வாக்கியத்தைக் கூறுகிறது.

இந்த சுவிசேஷ யுகத்தில், தேவனிடத்திலிருந்து மனுக்குலத்திற்கு ஒரு அழைப்பு சென்றுக் கொண்டிருப்பதாக வசனங்கள் நமக்குக் கூறுகிறது. இந்த அழைப்பு ஒவ்வொரு தனி நபர்களையும், தேவனுடைய குமாரர்களாக இழுத்துக் கொள்ளுகிறது. இது அழைப்பு மட்டுமல்ல, இது ஒரு உன்னத அல்லது பரம அழைப்பாகும் (1 கொரி. 1:26). இந்த வார்த்தையை நாம் பார்க்கும் போது, தாழ்வான அல்லது குறைவான அழைப்பும் இருக்க வேண்டும் என்று பொருள்படுகிறது. இவர்கள் பூமியின் ஜாதிகளில் இருந்து பிரிக்கப்பட்ட விசேஷித்த ஜனங்களாகிய மாம்ச இஸ்ரயேலர்களாக இருக்க வேண்டும் என்று நம்புகிறோம். "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்து கொண்டேன்" (ஆமோ. 3:2). ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் மாம்ச இஸ்ரயேலருக்குக் கொடுக்கப்பட்டாலும், மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாததினிமித்தம் அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். ஆனால், இனிவரும் காலத்தில் சுபாவ ஒலிவ மரமாகிய ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களின் பங்காளிகளாக மாறுவதற்கு தரிக்கப்பட்ட ஒலிவ கிளைகள் மீண்டும் ஒட்ட வைக்கப்படுவதற்கு வாய்ப்பைப் பெறுவார்கள் (ரோ. 11:15-36). ஆனால், பிலி. 3:14; எபே. 4:4 மற்றும் ரோ. 1:7 வசனங்களில் பரம அழைப்பைப் பற்றிக் குறிப்பிடுகிறது - நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவோடு ஐக்கியப்படவும், பரிசுத்தவான்களாக மாறுவதற்கு அழைப்பைப் பெற்றிருக்கிறோம் (1 கொரி. 1:2, 9).

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவன் கொடுக்கும் பரம அழைப்பு எதற்கு?" என்ற இயல்பான கேள்வி எழலாம். பொதுவாக இந்த பரம அழைப்பிற்குரிய விதிமுறைகள் என்ன என்பதையும், மனுஷனுக்கான இரட்சிப்பின் திட்டத்தில் இந்த பரம அழைப்பு எவ்வகையில் தொடர்புடையதாக இருக்கிறது என்றும் நாம் விசாரிக்கலாம்.

### ஆவிக்குரிய அழைப்பு

இந்த சுவிசேஷ யுகத்தில் மனித குடும்பத்திற்காக பரம அழைப்பிற்கான இது ஒரு விசேஷித்த அழைப்பாக உள்ளது. இந்த அழைப்பைப் பெற்றவர்கள் கிறிஸ்துவின் சாயலுக்குத் தங்களை உறுதிபடுத்திக் கொண்டு கர்த்தர் குறிப்பிட்டிருக்கும் சிறு மந்தைக்கான பரிசைப் பெறுவார்கள் (லூக். 12:32). இந்த சிறுமந்தையின் எண்ணிக்கை 1,44,000 பேர்கள் என்று வெளி. 14:1-ம் வசனம் துல்லியமாகக் கொடுக்கிறது. ஒரு முக்கியமான நோக்கத்திற்காக இவர்கள் விசேஷித்த அழைப்பைப் பெற்றிருக்கிறார்கள். அந்த நோக்கம் என்ன? ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத் தத்தின் பங்காளிகளாக கிறிஸ்துவோடு பாடுபட்டு "இந்த பூமியின் ஜாதிகளை ஆசீர்வதிப்பதே" நோக்கமாகும். உபத்திரவங்களின் வழியாக கிறிஸ்துவின் சிந்தையைப் பெறுவதற்கு சரியான முயற்சிகளை மேற் கொண்டு கிறிஸ்துவோடு ஆட்சி செய்வதற்கு தகுதி உள்ளவர்கள் என்று தங்களை நிரூபிக்க வேண்டும் (கலா. 3:8- 9, 29; வெளி. 20:4).

உலகம் தோன்றுவதற்கு முன்னதாகவே இந்த வகுப்பாரை தேவனுடைய திட்டத்தில் முன் குறிக்கப்பட்டிருந்தாலும், அதிலுள்ள தனிப்பட்ட நபர்கள் முன் குறிக்கப்படவில்லை. இந்த விசேஷித்த அழைப்பைப் பெற்றவர்கள் (1) பாவங்களுக்காக மனம்வருந்தி கிறிஸ்துவின் இரத்தத்தினால் நீதிமான்களாக்கப்பட்ட நிலையைப் பெற வேண்டும் (ரோ. 5:9). அதற்குப் பின், (2) தேவனுடைய சித்தம் செய்வதற்கு தங்களுடைய சித்தத்தை விட்டுக் கொடுக்க வேண்டும். மற்றும், (3) தங்களையே வெறுத்து சிலுவையைச் சுமந்து கொண்டு இயேசுவுக்குப் பின் செல்ல வேண்டும் (மத். 16:24). அதற்குப் பின், தேவன் அவர்களை ஏற்றுக்கொண்டால்

ஆவிக்குரிய நிலையில் பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கப்படுவார்கள் (2 கொரி. 5:17). அதைத் தொடர்ந்து கிறிஸ்து இயேசுவுக்குள் பரம அழைப்பின் பந்தயப் பொருளைப் பெற்றுக்கொள்ள பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாக பரிசுத்தமான தேவனுடைய வார்த்தையில் குறிப்பிட்டப்படி தங்களுடைய அன்பளிப்புக்குக் கொடுக்கப்பட்ட சகல விதிமுறைகளை நிறைவேற்றிக் கொண்டு மாம்சத்தில் ஓடுகிறார்கள்.

**பரம அழைப்பின் விதிமுறைகளும், நிபந்தனைகளும்**

பரம அழைப்பின் நிபந்தனைகளும், விதிமுறைகளும் என்ன? ஒரு மனுஷனுடைய காலம், தாலந்துகள், செல்வாக்குகள் மற்றும் சகலவற்றையும் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் பணிக்காக முழு அர்ப்பணிப்போடு பயன்படுத்த வேண்டும். பாவியாக இருப்பதை அறிக்கையிட்டு அதை உணரும்படியாகவும் தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்படுவதற்காக நீதிமானாக்கப்பட்ட நிலையைப் பெறுவதற்காக இரட்சகரின் இரக்கங்களைப் பெற வேண்டும் என்ற காரியங்களை இந்த அர்ப்பணிப்பு அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். தேவன் பாவிகளோடு இன்றும் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை (மத். 8:22). இந்த சிறுமந்தையின் பகுதியாக மாறுவதற்கு ஒருவர் நீதிமானாக்கப்பட வேண்டும் (ரோ. 5:1-2). சுயத்தை வெறுத்து, மாம்சத்தின் சிறிதளவு விருப்பங்களுக்கும் எதிராக செயல்படுவதே பரம அழைப்பின் பந்தயப் பொருளைப் பெறுவதற்கான விதிமுறையாகும். அதாவது, நம்முடைய மனித பேரார்வங்கள் பூமிக்குரிய நம்பிக்கைகள், இலக்குகள் இக்காலத்து விருப்பங்கள் அனைத்தையும் நாம் அடக்கிக்கொள்ள வேண்டும்.

இந்த பரம அழைப்பின் வாழ்க்கையானது, நாம் பெற்ற இந்த ஜீவனை உடனடியாகக் களைந்துவிட்டு இனி வரக்கூடிய பரிசுகளைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக வாழக்கூடிய ஒரு வாழ்க்கையாகும். இந்த பரம அழைப்பைப் பெறக்கூடிய அநேகர் இதன் காரணமாகவே இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்து விடுகிறார்கள். இதற்கு அதிகமாக செலவழிக்க வேண்டும் (மத். 6:19-21). நித்தமும் வேத வாசிப்பு ஜெபத்தோடு வாசித்ததைப் பிரயோகித்து கிறிஸ்து இயேசுவின் மன நிலையைப் போல, நம்முடைய மன நிலையும் மாறுவதற்கு மிகுந்த முயற்சிகளை நித்தமும் மேற்கொள்ள வேண்டும். இந்த பாதையில் செல்வதற்கு இதுவே தேவைப்படும் விதி முறைகளாகும். கிறிஸ்துவின் சாயலே இதன் இலக்கு. இதுவே பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்கான அடையாளம் (பிலி. 2:5; 3:14).

இந்த பரம அழைப்போடு சம்பந்தப்பட்ட தெய்வீகமான தேவைகளை நிறைவேற்றுவதற்கு நாம் பல நட்புகளை இழக்க வேண்டியதாக இருக்கும். நாம் செழிப்பாக வாழ்வதற்குக் கிடைக்கும் பூமிக்குரிய வாய்ப்புகளை இழக்க வேண்டியதாக இருக்கும். மேலும், தேவனுடைய சத்தியத்தை எதிர்ப்பவர்களால் பல சிலுவை சுமக்கும் உபத்திரவங்களையும், நீதியினிமித்தம் பாடுகளையும் அனுபவிக்க வேண்டியதாக இருக்கும். "தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக். 14:7) என்று லூக்கா கூறுகிறார். புது சிருஷ்டியாக இருப்பதற்கு - மரணமா? ஜீவனா? என்ற மிகப்பெரிய போராட்டத்தை தைரியமாகப் போராட வேண்டும். மாம்சத்தோடு மட்டுமல்ல, இந்த உலகத்தின் பாதிப்புகளிலிருந்தும், சாத்தானுடைய நய வஞ்சகமான தந்திரங்களோடும் போராட வேண்டியதாக இருக்கும். 1,44,000 பேர்களை எதிரிடையான சூழலில் வளர்ச்சியடைவதற்கு இந்தத் தீமையான உலகத்தை ஒரு வாய்ப்பின் வழியாக (ஜன்னல்) தேவன் பயன்படுத்துகிறார்.

இந்த சூழலில் தங்களையே நிரூபித்துக் காட்டுபவர்கள் தெய்வீக சுபாவத்தைப் பரிசாகப் பெறுவார்கள். வசனங்களைப் பொறுத்த வரையில் தனி நபர்களே சோதித்து புது சிருஷ்டிகளாக வளர்ச்சியடைவதற்கு இருக்கக்கூடிய இந்த பாவமான சூழல் இனி என்றும் காணப்படாது என்று தெளிவாகக் காட்டுகிறது. "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்" (ரோ. 8:18) என்று வாக்களிக்கப்பட்டிருக்கிறது.

**பரம அழைப்பும், தேவனுடைய இரட்சிப்பின் திட்டமும்**

இந்த பரம அழைப்பு மனுஷனுக்காக தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தோடு எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கிறது? எல்லாவற்றிற்கும் முதலாவதாக தேவனுடைய புத்திரர்களாக அழைக்கப்படும் இந்த அழைப்பு மிக முக்கியமானதாக இருக்க வேண்டும். ஏனெனில், "மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது" (ரோ. 8:19) என்று நாம் வாசிக்கின்றோம். கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தில் - சிறுமந்தையாகிய சபை - தங்களுடைய இராஜாவாகிய இயேசு கிறிஸ்துவோடு

சீக்கிரமாக வெளிப்பட வேண்டும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அநேக "பெயரளவிலான கிறிஸ்தவர்கள்" தேவனுடைய கிருபையைப் பெறுவதற்கு **அவர்களே** இறுதியானவர்கள் என்று நம்புகிறார்கள். ஆயினும், பூரணமாக்கப்பட்ட மனுக்குலமே தேவனுடைய கிருபையைப் பெறக்கூடிய கடைசி வகுப்பாராக இருப்பார்கள் என்று வசனங்கள் முன் அறிவிக்கிறது.


தேவன் அவர்களுக்கு முன் வைத்த தொகுப்பானப் பாடங்களால் எங்களுடைய வாழ்க்கையை சீரமைத்து சிறுமந்தையாக வளர்ச்சியடையும் போது ஆபிரகாமின் வித்து ஒரு பகுதியாக தெய்வீக நிலையை அடைவார்கள். இவர்கள் மனுக்குலத்தை தேவனுடைய விருப்பத்தின்படி பூரணர்களாக அவர்களை அவரோடுகூட ஆசீர்வதிக்கும் இரக்கமுள்ள ஆசாரியர்களாக இருப்பார்கள் - இதுவே, "உங்கள்பொருட்டுத் தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன். புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" (கொலோ. 1:26-27).

ஆகவே, முடிவு வரைக்கும் ஒரு முக்கியமான நோக்கத்திற்காக பரம அழைப்பைப் பெற்றவர்கள் தேர்ச்சிப் பெறுவார்கள். கிறிஸ்துவின் ஈடுபலியை அடிப்படையாகக் கொண்டு, மனுக்குலத்தைப் பூரணப்படுத்துவார்கள். இதைக் குறித்த நிழலை நாம் லேவி. 16:10, 15-ம் வசனங்களில் வாசிக்கலாம். (எபி. 13:11-13) (பாவநிவாரண பலியின் நன்மையில் விசுவாசமுள்ள சபைக்கு எந்த பங்கும் இல்லை. இந்த ஒரு நன்மை இயேசு கிறிஸ்துவின் பலியினால் மட்டுமே கொடுக்கப்படுகிறது). "ஏசாவின் பர்வதத்தை நியாயந்தீர்ப்பதற்காக இரட்சகர்கள் சீயோன் பர்வதத்தில் வந்தேறுவார்கள்; அப்பொழுது ராஜ்யம் கர்த்தருடையதாய் இருக்கும்" (ஒப. 1:21) என்ற வசனத்தை நாம் எவ்வாறு விவரிக்கிறது? (ஒபதியா புஸ்தகத்தை முழுமையாகப் படிக்கவும்).

இயேசு கிறிஸ்துவுக்குள் தேவன் அழைத்த உன்னதமான அழைப்பு தனிப்பட்ட நபர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து ஆபிரகாமின் சந்ததியின் ஒரு பகுதியாகிய மரித்துக் கொண்டிருக்கும் உலகத்தை எழுப்பி, அவர்களை ஆசீர்வதிப்பார்கள். அனைவரையும் பாவத்திலிருந்தும் அதின் விளைவுகளிலிருந்தும் விடுதலையாக்கப் படுவார்கள். இந்த வகுப்பார் ஒரு விசேஷித்த நோக்கத்திற்காகப் பரம அழைப்பின் மூலமாக வளர்ச்சியடைகிறார்கள். இந்த மனுக்குலம் பரிபூரண நிலைக்கும், நீதியின் வாழ்க்கைக்கும் சீர்பொருந்தி மீண்டும் தேவனோடு இசைந்து செயல்படுவதற்கு இந்த வகுப்பார் கிறிஸ்துவோடு இணைந்து செயல்படுவார்கள்.

"ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" (வெளி. 22:17) என்று கூறுகிறது. இந்த ஒரு பரம அழைப்பு மணவாட்டியை வளர்ச்சியடையச் செய்து இந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறது. "மனுஷனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும்" (சங். 76:10) என்று வசனங்கள் சாட்சியிடுகிறது.

# அவருடைய பிரசன்னத்திற்குரிய வாக்குத்தத்தம் எங்கே?



Ernie Kuenzli

"முதலாவது நீங்கள் அறியவேண்டியது என்னவெனில்: கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து, …அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? " (2 பேது. 3:3-4)

தேவனுடைய பூமிக்குரிய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு அவருடைய சபையைக் கூட்டிச் சேர்ப்பதற்காக கிறிஸ்து மீண்டும் வரக்கூடிய காரியம், மனுக்குலத்தின் இரட்சிப்புக்கான தேவனுடைய திட்டத்தின் அம்சங்களில் இது ஒரு முக்கியமானக் காரியமாக அம்சமாக இருக்கிறது. பூமியிலுள்ள முழு குடும்பங்களும் ஆசீர்வதிக்கப படுவதற்கு தேவனுடைய வாக்குத்தத்தம் இந்தப் பூமிக்குரிய இராஜ்யத்தில் நிறைவேறும் (ஆதி. 12:3). ஆயினும், 2 பேது. 2:3-4-ம் வசனங்களில் ஆண்டவரின் வருகையைக் குறித்த வாக்குத்தத்தத்தை பேதுரு தீர்க்கதரிசனமாக உரைத்ததை கிறிஸ்தவ உலகம் பார்க்கத் தவறுகிறது.

### நம்முடைய ஆண்டவரின் வருகைக்கான நோக்கம்

தேவனோடு மீண்டும் இசைந்திருப்பதற்கு பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் மனித குடும்பத்தைத் தூக்கி திரும்பக் கொடுப்பதற்கான வேலைகளை நிறைவேற்றுவதற்கு நம்முடைய ஆண்டவர் திரும்ப வந்திருக்கிறார் (அப். 3:20-23). கீழ்க்காணும் மூன்று காரியங்களை நிறைவேற்றுவதற்கு இயேசு திரும்பி வந்திருக்கிறார். (1)தம்முடைய சபையாக உடன் ஆளுநர்களை முழு மைப்படுத்துவதற்கு, (2) அவருடைய இராஜ்யத் திற்காகவும், (3) அது ஸ்தாபிக்கப்படுவதற்காகவும் இந்தப் பூமியை ஆயத்தப்படுத்த வந்தார்.

ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் ஆவிக்குரிய வித்தாகிய மணவாட்டியைப் பூரணப்படுத்துவதற்காக இயேசு திரும்பி வந்தார் என்று வசனங்கள் கூறுகிறது. 1,44,000 பேர்களாகிய இவர்கள் பிதாவின் நாமத்தில் தங்களுடைய நெற்றிகளில் எழுதப்பட்டவர்களாக சீயோன் மலையில் நிற்பார்கள் (வெளி. 14:1). மனுக்குலம் ஆண்டவரோடு மீண்டும் இசைந்திருப்பதற்கு ஆண்டவரோடு கூட இவர்கள் மெல்கிசேதேக்கின் முறைமையில் செயல்படுவார்கள் (எபி. 5:6; வெளி. 20:6).

சத்திய வார்த்தையின்படி இயேசுவின் வருகையை கவனித்திருக்கும் சபையின் கடைசி அங்கத்தினர்களைப் போஷித்து, அவர்களைப் பூரணப்படுத்துவதற்கு இயேசு திரும்பி வருகிறார். "அவர் அரைகட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார்" (லூக். 12:37) - அறுவடை சத்தியம். இருண்ட காலங்களில் தொலைந்துபோன தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் உபதேசங்களில் ஆதி சபையில் பேசப்பட்ட சத்தியங்களை மீண்டும் இயேசு அவருடைய இரண்டாம் வருகையில் போதிப்பார்.

(1) ஆதாமுக்காக இயேசு தம்முடைய பூமிக்குரிய வாழ்க்கையை ஈடுபலியாகக் கொடுத்தார். (2) மனுஷன் ஜீவாத்துமாவானான். (3) எரிகிற நரகம் இல்லை. (4) வருங்கால வாழ்க்கையில் உயிர்த்தெழுதலின் வாக்குத்தத்தின் நம்பிக்கைப் போன்ற சத்தியங்கள் இதில் அடங்கும்.

ஆண்டவரால் துவங்கப்பட்ட உண்மை சத்தியம் மற்றும் அதைத் தொடர்ந்து சத்தியத்தை விதைத்த அப்போஸ்தலர்களின் சபைக்கும், சாத்தானால் விதைக்கப்பட்ட தவறான உபதேசங்களினால் ஏற்படுத்தப்பட்ட பொய் சபைக்கும், இந்த அறுவடை சத்தியம் மிகப்பெரிய வித்தியாசத்தைக் காட்டுகிறது. அறுவடை வரைக்கும் உண்மை சபையும், போலியான சபையும் வளரும். அதற்குப் பின் இயேசு விவரித்த உவமையில், உண்மை சபையும் (கோதுமை), போலி சபையும் (களைகள்) பிரிக்கப்படும் (மத். 13:30, 41-43). உண்மையான சபையை அறுவடை செய்வதற்காக இயேசு பயன்படுத்தப்படும் கருக்கான அரிவாள் இந்தப் பிரிவை விவரிக்கிறது (வெளி. 14:14-16). அறுவடை செய்யப்பட்ட உண்மையான சபையை பரலோக பரிசைப் பெறுவதற்கு அழைத்து செல்லப்படுவார்கள். அதேநேரத்தில், போலி சபை தேவனுடைய கோபாக்கினையான திராட்ச ஆலையில் மிதிக்கப்படுவதற்கு எறிந்து போடப்படும் (வெளி. 14:18-20). அவருடைய சபையை நிறைவு செய்த பின் இயேசு தம்முடைய சீஷர்களை (உண்மை சபை) நியாயந்தீர்த்து, தாலந்து உவமையில் சொல்லப்பட்ட படி, (மத். 25:19-30) கொடுக்கப்பட்ட தாலந்துகளின் படி அவரவர் விசுவாசத்தின் படி பலனளிப்பார். இயேசு அவர் இருக்கும் இடமாகிய பரலோகத்தில் விசுவாசமுள்ள சீஷர்களை ஏற்றுக்கொள்வார் (யோவா. 14:2-3).

### பூமியை ஆயத்தப்படுத்தல்

இரண்டாவதாக, இயேசு தம்முடைய பூமிக்குரிய இராஜ்யத்திற்காக ஆயத்தப் படுத்துவதற்காக திரும்பி வந்திருக்கிறார். கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தின் போது,

ஜாதிகளை மோசம் போக்காதபடிக்கு சாத்தானை அவர் ஆயிரம் வருஷம் கட்டி வைப்பார் (வெளி. 20:1-3). அவர் தேசங்களை நொறுக்குவார் (சங். 2:8). பொய் மத அமைப்புகளை கடக்கச் செய்து, புதிய வானங்களையும், பூமியையும் ஸதாபிப்பதற்காக எல்லா மூலக்கூறுகளையும் உருவாக்குவார் (2 பேது. 3:10, 13). மனுக்குலத்திற்கு நீதியைக் கற்றுக்கொடுப்பதற்கு ஏற்ற சூழல்களை உருவாக்குவதற்கு இயேசு இவைகளைச் செய்கிறார்.

### பூமிக்குரிய இராஜியத்தை ஸ்தாபித்தல்

இறுதியாக, இந்தப் பூமியில் அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபித்து, ஆதாமின் பாவத்தினால் தொலைத்த அனைத்தையும் திரும்பக் கொடுப்பதற்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேற்றும்படிக்கு இயேசு வந்திருக்கிறார். இயேசுவின் ஆளுகையானது, முழு மனுக்குலத்தையும் பரிசுத்தமான பாதையில் நடத்தி, தேவனோடு இசைந்திருக்கும்படியாக அவர்களை முந்தின சீருக்குக் கொண்டுவரும். இயேசு தம்முடைய இராஜ்யத்தில் மனுக்குலத்தை கல்லறையிலிருந்து அழைத்துவந்து (யோவா. 5:28-29), அவர்களின் வியாதிகளைக் குணமாக்கி (ஏசா. 33:24), நீதியைப் போதித்து (ஏசா. 26:9), தேவனோடு இசைந்திருக்கும்படிக்கு பரிசுத்த பாதையில் நடத்துவார் (ஏசா. 35:5-10). பிரமாணங்களை எழுதவும், அதனால் ஊக்குவிக்கப்பட்டு தேவனுடைய சித்தத்திற்கும் அவருடைய கற்பனைகளுக்கும் கீழ்ப்படியும்படியாகவும் அவர்களின் கல்லான இருதயத்தை எடுத்துவிட்டு, சதையான இருதயத்தைக் கொடுப்பார் (எரே. 31:33-34; எசே. 36:26-27). அதற்குப் பின் மனித குடும்பத்தை தேவனுடைய பிரமாணத்தின்படி ஒவ்வொருவரும் நித்திய ஜீவனுக்கு அல்லது நித்திய மரணத்துக்குப் பாத்திரவான்களா என்று சோதித்து, அவர்களை நியாயந்தீர்த்து, செம்மறி ஆடுகளாகவும், வெள்ளாடுகளாகவும் பிரிப்பார் (மத். 25:31-32). பாவத்திலிருந்து மீட்டு மனுஷனை இரட்சிக்க தேவன் அளித்த எல்லா வாக்குத்தத்தங்கள் மற்றும் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இயேசு திரும்பி வந்திருக்கிறார்.

### நம்முடைய ஆண்டவரின் பிரசன்னம்

புதிய ஏற்பாட்டில், நம்முடைய ஆண்டவரின் வருகையை விவரிப்பதற்கு, பல கிரேக்க வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதில் ஒன்று, "பரௌஷியா" (G3952). இதற்கு, அருகில் அல்லது பிரசன்னம் என்று பொருள். வசனங்கள் விவரிக்கக்கூடிய "வருகை" என்ற வார்த்தைக்கு உண்மையில் பரௌஷியா என்ற கிரேக்க வார்த்தைக் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு எடுத்துக் காட்டாக, மத். 24:3,27, 37, 39; 1 தெச. 2:19; 3:13; 4:15; 5:23; 2 தெச. 2:1, 8-9; யாக். 5:7-8 மற்றும் 2 பேது. 3:4, 12.

### மத்தேயு 24-ம் அதிகாரம்

நம்முடைய ஆண்டவரின் பிரசன்னத்தின் வளர்ச்சிக்குரிய இயல்பைப் பற்றி மத். 24-ம் அதிகாரம் நமக்கோர் சிறந்த வர்ணனையைக் கொடுத்துள்ளது. இயேசுவின் சீஷர்கள் கேட்ட ஒரு கேள்வியைக் கொண்டு இது துவங்குகிறது. "பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள்" (மத். 24:3). அதற்கு, மத். 27:24-ம் வசனத்தில் இயேசு பதிலளித்த போது, நாம் வாழக்கூடிய அவருடைய இரண்டாம் பிரசன்னத்தின் முழு காலப்பகுதிக்குரிய விவரங்களை அருமையாகக் கொடுக்கிறார். "மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். "மின்னல்" என்ற வார்த்தை "ஆஸ்டிராப்" (G796) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு பிரகாசித்தல் அல்லது மின்னுதல் என்று பொருள். குறிப்பாக, மின்னல் கிழக்கிலிருந்து மேற்குக்குச் செல்லாது. ஆயினும், உதிக்கக்கூடிய சூரியனுடைய உதயமானது, மிகுந்த பிரகாசத்தோடு கிழக்கிலிருந்து மேற்கு வரைக்கும் செல்லும். நம்முடைய ஆண்டவர் சூரியனுடைய உதயத்திற்கு தம்முடைய வருகையை ஒப்பிட்டுப் பேசுகிறார் - முதலாவது, அவருடைய சபைக்கு தம்மை வெளிப்படுத்துவார். அதற்குப் பின் மீதியுள்ள மனுக்குலத்திற்கு அவரை வெளிப்படுத்துவார். இந்த விளக்கம் மற்ற வசனங்களோடுகூட இசைவாகக் காணப்படுகிறது (2 பேது. 1:19; மல். 4:2).

### கண்ணுக்குப் புலப்படாத பிரசன்னம் நோவாவின் நாட்களினால் உறுதிப்படுத்தப்படுகிறது

துவக்கத்தில், மறைக்கப்பட்டிருந்த நம்முடைய ஆண்டவரின் கண்ணுக்குப் புலப்படாத பிரசன்னம் நம்முடைய ஆண்டவரால், மத். 24:37-39-ம் வசனங்களில் உறுதிப்படுத்தப்பட்டது. அதில் அவர் தம்முடைய வருகையை நோவாவின் நாட்களுக்கு ஒப்பிட்டார். வரக்கூடிய ஜலப்பிரளயத்தைக் குறித்து எவ்வாறு நோவாவின் நாட்களில் அறியாதிருந்தார்களோ, அப்படியே, உபத்திரவத்தின் காலம் தங்கள் மேல் வரும்வரைக்கும் இந்தத்

தீமையான உலகம் ஆண்டவருடைய பிரசன்னத்தை அறியாதிருக்கும் என்று விவரிக்கிறார்.

### நம்முடைய ஆண்டவரின் வருகை ஒரு திருடனைப் போல் இரகசியமக இருக்கும்

"உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்" மத். 24:42-43 என்று ஆண்டவர் சீஷர்களிடம் கூறினார். ஆகவே, சபையானாலும் சரி, சாத்தானானாலும் சரி, நம்முடைய ஆண்டவரின் வரக்கூடிய தேதியைக் குறித்து முன் அறியாதவர்களாக இருக்கிறார்கள். இதை பவுல், 1 தெச. 5:1-6-ம் வசனங்களில் உறுதிப்படுத்துகிறார். நம்முடைய ஆண்டவர் இரவில் திருடன் வருகிறவிதமாக இரகசியமாக வருவார் என்று குறிப்பிடுகிறார். நம்முடைய ஆண்டவரின் பிரசன்னத்தை உலகம் அறியாதிருக்கும். ஏனெனில், இந்த உலகம், "சமாதானம், பாதுகாப்பு" என்று சொல்லிக் கொண்டிருக்கையில் நம்முடைய ஆண்டவர் முன்னதாகவே வந்திருப்பதினால் திடீரென்று அழிவுக்குரிய அனுபவங்களைப் பெறுவார்கள். நீதி வாசம் செய்யும் புதிய வானங்களும், பூமியுமாகிய கிறிஸ்துவின் இராஜ்யம் பிறக்கும் வரையில் இந்த உபத்திரவங்கள் நீடிக்கும் (2 பேது. 3:13).

### நம்முடைய ஆண்டவரின் பிரசன்னத்திற்குரிய அடையாளங்கள்

ஆயினும், இயேசுவின் சீஷர்கள் இருளில் இராததினால் அவருடைய வருகையைக் குறித்து அவர்கள் அறியாதவர்கள் அல்லவே. அவருடைய வருகைக்குரிய அடையாளங்களை விழித்துக் கவனித்திருக்க வேண்டும் மத். 24 மற்றும் தானி. 12-ல் இயேசுவின் பிரசன்னத்திற்குரிய அடையாளங்களை நாம் காண்பதினால் நம்முடைய ஆண்டவர் வந்துவிட்டார் என்று நம்புகிறோம்.

மத். 24:3-ல், "பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும்" என்று சீஷர்கள் இயேசுவிடம் கேட்டார்கள். 15-28 வசனங்களில், இயேசுவின் பிரசன்னத்தை சுவிசேஷ யுகத்தின் முடிவிலுள்ள தற்காலிக நிலைகளைக் குறித்து, நம்முடைய ஆண்டவர் விவரிக்கிறார். உலகத்தோற்ற முதல் இதுவரையில் சம்பவித்திராத மகாஉபத்திரவ காலம் இதற்கு ஒரு அடையாளமாக சொல்லப்படுகிறது. இந்தக் காலம் குறைக்கப்படாமலிருந்தால் ஒருவரும் தப்பிப் போவதில்லை (21-22) - இந்த உபத்திரவத்தை தானியேல் தீர்க்கதரிசி நம்முடைய ஆண்டவருடைய பிரசன்னத்தோடு இணைத்துப் பேசுகிறார். "உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்; யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்" (தானி. 12:1). மிகாயேல் (நம்முடைய ஆண்டவர்) எழுந்திருக்கும் போது (வந்திருக்கும் போது) மிகுந்த உபத்திரவம் ஏற்படும்.

1874-ம் வருடத்திலிருந்து கிறிஸ்தவ சபை அமைப்புகளில் மற்றும் முதலாளி மற்றும் தொழிலாளி மற்றும் தேசங்களுக்கு இடையில் பிரச்சனைகள் வளர்ந்து போர்களாக மூண்டுக் கொண்டிருப்பதை நாம் கண்டுக்கொண்டிருக்கிறோம். இந்த உபத்திரவங்கள் புறஜாதியாரின் முடிவாகிய 1914-ம் வருடம் துவங்கியது. இது, **முதலாம் உலகப் போருக்கு** நடத்தியது (1914-1918). இது **ஆழமான அழுத்தத்திற்கு** வழி நடத்தியது (1929-1939). அதற்குப் பின் **இரண்டாம் உலகப் போர்** நடந்தது (1939-1945). மற்றும் **உள்நாட்டு கலவரங்கள்** நடந்தது (1946-1989). அதைத் தொடர்ந்து **மத்திய கிழக்குப் பிரச்சனைகள்** இவைகள் காலப்போக்கில் மனுஷனை ஒரு இறுதியான உலகப்போருக்குள் நடத்தும் - யாக்கோபின் இக்கட்டுக்காலம் (எரே. 30:6-8). இந்த அனைத்துப் பிரச்சனைகளும் நம்முடைய ஆண்டவரின் பிரசன்னத்தை உறுதிபடுத்துகிறது. இதைத் தொடர்ந்து, "குயவர் கரத்திலுள்ள பாத்திரங்கள் நொறுக்கப்படுவதைப் போல நொறுக்கப்படுவார்கள்" (சங். 2:9).

### மனுஷகுமாரனின் அடையாளம்

அவருடைய வருகையைக்குறித்து மத். 24:30-34 வசனங்களில் இயேசு கூடுதலான நிரூபணங்களைத் தருகிறார்.

"அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு

திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள். அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்."

விசுவாசமுள்ள தேவனுடைய ஜனங்கள் விழித்திருக்கும் போது, இயேசுவின் பிரசன்னத்தைக் கண்டுபிடிப்பதற்கான நான்கு ஆதாரங்களை இந்த வசனங்கள் நமக்குக் கொடுக்கிறது: (1) கண்ணுக்குத் தெரியாத ஆவிக்குரிய ஆட்சியில் (வானத்தில்) மனுஷகுமாரனுடைய அடையாளம், (2) மிகுந்த எக்காள சத்தத்தோடு தூதர்கள் அனுப்பப்படுதல், (3) தெரிந்துகொள்ளப்பட்டவர்களை நான்கு காற்றுகளிலிருந்து கூட்டிச் சேர்த்தல், (4) அத்திமரம் துளிர்விடுதல். இந்த **நான்கு காரியங்களும்** நம்முடைய ஆண்டவர் வந்துவிட்டார் என்பதை நிரூபிக்கிறது (மத். 24:33).

### பரலோகத்தில் மனுஷகுமாரனுடைய அடையாளம்

"முதலில் நம்முடைய நாட்களில் கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு பொய் அமைப்புகளின் மேல் வந்திருப்பதே வானத்தில் காணப்படும் அடையாளம்" என்று சகோ. ரஸல் கருதுகிறார். அவருடைய நாட்களில் நடந்த சம்பவங்களை நியாயத்தீர்ப்புகள் குறித்து அவர் விவரிக்கிறார்:

> (1) "கோரப்பட்ட உபதேசத்திற்கும் மற்றும் வேதாகமத்திற்கும் காணப்பட்ட வித்தியாசங்கள் மற்றும் பல கோணங்களில் வந்த பிரச்சனைகள்."
>
> (2) தேவ பக்தி மற்றும் பயத்தின் குறைவுகள் அவளிடம் குறிப்பிடப்பட்டது.
>
> (3) இந்தப் பூமியை கிறிஸ்தவர்களாக மாற்ற வேண்டும் என்று அறிக்கையிட்டாலும் அவளால் அதை நிறைவேற்ற இயலாமல் தோல்வியடைந்தாள்.

இந்த நியாயத்தீர்ப்புகள் இனி வரக்கூடிய அடையாளமான வானங்கள் அல்லது பாபிலோனின் (கிறிஸ்தவ மண்டலம்) அழிவின் முன் அறிவிப்பைக் குறித்து பேதுரு விவரிக்கிறார். "வானங்கள் மடமட என்று அகன்றுபோம்" (2 பேது. 3:10).

### எக்காளச் சத்தம்

எக்காளச் சத்தம் - அறுவடை சத்தியத்தின் செய்தியாகும். நம்முடைய ஆண்டவரின் பூமிக்குரிய தூதர்கள் இதை அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஒரு எக்காளம் நம்முடைய ஆண்டவராலும் ஊதப்பட்டது (1 தெச. 4:16). "அவளைவிட்டு வெளியே வாருங்கள்" (வெளி. 18:4) என்ற செய்தியும் இதில் அடங்கும். தேவனுடைய ஜனங்கள் பொய் மத சபைகளை விட்டு வெளியேற வேண்டும். உண்மையான சபையிலுள்ள மற்றவர்களோடு ஐக்கியப்பட வேண்டும். இப்போது அதன் உண்மையான இயல்பு வெளிப்படுத்தப்படுகிறது (மத். 24:16). இவர்கள் ஒரு புதிய அமைப்பை உருவாக்குவதில்லை. மாறாக, களைகளாகிய இவர்களைவிட்டு கோதுமை மணிகள் பிரிக்கப்படுகிறது. மிகுந்த வல்லமையோடு பரலோகத்திலிருந்து வந்த அவருடைய மகிமையினால் இந்தப் பூமியை பிரகாசித்த தூதனாகிய நம்முடைய ஆண்டவர் திரும்ப வந்தபோது இந்தச் செய்தி அறிவிக்கப்பட்டது (வெளி. 18:1).

சகோ. சார்லஸ் ரசலின் ஊழியத்தின் வழியாகவே நாம் இந்தச் செய்தியைக் கேட்டிருக்கிறோம். ஆதாமுக்காக நம்முடைய ஆண்டவரின் ஈடுபலியை அடிப்படையாகக்கொண்ட யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டத்தின் செய்தியாகும். இந்தச் செய்தியை இன்று நாமும் பிரசங்கிக்கிறோம். இந்தச் செய்தியைக் கொண்டு நாமும் அழைப்புப் பெற்றோம். இப்போது நாமும் தூதர்களாகிய மற்றவர்கள் கேட்டு கிரியை செய்யும்படியாக, இந்தச் செய்திகளை எக்காளமாக ஊதிக்கொண்டிருக்கிறோம்.

### தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்த்தல்

தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்ப்பதை சுவிசேஷ யுகத்தின் முடிவில் நமக்குச் சபையின் அறுவடையாக விவரிக்கப்படுகிறது. இது கோதுமையிலிருந்து (உண்மையான சபை) களைகள் (பொய் சபை) பிரிப்பதன் மூலம் காட்டப்படுகிறது (மத். 13:30). மற்றும் கெட்ட மீன்களை நல்ல மீன்களிலிருந்து பிரிக்கப்படுகிறது (மத். 13:47-50). இன்று ஒவ்வொரு வேத மாணவர்களின் தனிப்பட்ட சபையும் இந்த வேலைக்கு ஒரு ஆதாரமாக இருக்கிறது. 1874-ம் வருடத்திற்கு முன் இவைகள் நடைபெறவில்லை. 1874-ம் வருடத்திற்குப் பின் ஒரு மிகப்பெரிய பிரிவு ஏற்பட்டது. பத்தாயிரம் கிறிஸ்தவர்கள் பொய் அமைப்புகளைவிட்டு வெளியே வந்தார்கள். ஆதி சபையில், சபை கூடிவந்தது போல வெளியே வந்தவர்கள் கூடினார்கள்.

### அத்திமரம் துளிர்விடுதல்

இஸ்ரயேல் மேலுள்ள சாபங்கள் நீங்கி இரக்கத்தின் காலம் துவங்கினதை அத்திமரத்தின் துளிர்விடுதல் குறிப்பிட்டது (மத். 24:32). யூத ஜாதியை அடையாளப்படுத்துவதற்கு அத்திமரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேசுவின் முதலாம் வருகையில் இஸ்ரயேல் ஜாதி கனியற்றவர்களாக இருந்ததைச் சுட்டிக்காட்டுவதற்காக நம்முடைய ஆண்டவர் அத்திமரத்தைப் பயன்படுத்தினார் (மத். 21:19-21). லூக். 13:6-9-ல் குறிப்பிடப்பட்ட உவமையிலும் இயேசு அத்திமரத்தை இஸ்ரயேலுக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். இன்று இஸ்ரயேல் மீண்டும் ஒரு தேசமானது. இந்தக் கூட்டிச் சேர்த்தலின் காரியம் 1878-ம் வருடம் துவங்கியது. பெர்லின் தேசிய ஐக்கியம் யூதர்களை பாலஸ்தீனாவில் நிலங்களை விலைக்கு வாங்கி அதில் குடியேறுவதற்கு அனுமதித்தது. இதைத் தொடர்ந்து மீன் பிடிப்பவர்களாகிய சீயோன் ஐக்கியத்தையும் 1896-ம் வருடம் தியோடர் ஹெர்சல் முதலில் துவங்கப்பட்டது (எரே. 16:16). அதைத் தொடர்ந்து வந்த பால்போஙர் யூதர்களுக்கு அவர்களுடைய தாய் நாட்டைக் கொடுக்க வேண்டும் என்று ஊக்கம் அளித்தது. இவைகள் அனைத்தும் ஒரு பேரழிவின் வழியாக யூதர்கள் பாலஸ்தீனாவில் குடியேற துரிதப்படுத்தியது. இக்காரியத்தைத் தொடர்ந்து 1948-ம் வருஷம் யூதர்கள் தங்களுடைய தேசத்தை ஸ்தாபிக்க வழி வகுத்தது.

நம்முடைய ஆண்டவர் தம்முடைய சீஷர்களிடம் வாக்களித்தப்படி நான்கு காரியங்களும் நடந்திட்டப்படியால் வந்துவிட்டார் என்ற ஆதாரங்கள் நிரூபிக்கப்படுகிறது (மத். 24:33).

### உண்மையும் விவேகமுமான ஊழியக்காரன்

மத். 24:45-47-ல் நம்முடைய ஆண்டவர் அவருடைய வருகையைக் குறித்த மற்றொரு அடையாளத்தைக் கூறினார். "ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்னமயும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்? எஜமான் வரும்போது அப்படிச் செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான். தன் ஆஸ்திகள் எல்லாவற்றின்மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." நம்முடைய ஆண்டவரின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்து, அதற்குப் பின் அந்த அறுவடை சத்தியங்களைப் பிரஸ்தாபப் படுத்துவதற்காக அவருடைய வாழ்க்கையையே தத்தம் செய்தவர் நம்முடைய மூத்த சகோதரனாகிய சார்லஸ் ரஸலாகும். இன்று நாம் பெற்றுள்ள யுகங்களைப் பற்றிய தெய்வீக ஏற்பாட்டின் அடிப்படையின் காரியங்களை அவர் தொகுத்துக் கொடுத்தார். ஆபகூக் தீர்க்கதரிசி எழுதிய தரிசனத்திலுள்ள தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை அவர் எழுதினார் (ஆபகூ. 2:2-3). அவர், "Studies in the Scriptures," The Watchtower magazine, Overland Monthly, The Photo Drama of Creation, newspaper sermons மற்றும் கைப்பிரதிகள் எழுதினார். இவைகள் அனைத்தும் அவருக்குள் வெளிப்பட்ட கிறிஸ்துவின் ஆவியினால் அவர் இயேசுவினால் விவரிக்கப்பட்ட ஊழியக்காரன் என்று அறிந்துகொள்கிறோம்.

### தானியேல் 12-ம் அதிகாரத்தின் அடையாளங்கள்

நம்முடைய ஆண்டவரின் பிரசன்னத்திற்கான இரண்டு கூடுதலான அடையாளங்களை தானியேல் தீர்க்கதரிசி கொடுத்திருக்கிறார். "தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு; அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்" (தானி. 12:4). இன்று நாம் காணக்கூடிய நவீன தொழில் நுட்ப கண்டுபிடிப்புகளும், போக்குவரத்து சாதனங்களும், அறிவிற்குரிய அதிகரிப்புக்கான சிறந்த வர்ணனையாகும். நவீனகாலத்தில் காணப்படும் எல்லா விஞ்ஞான கண்டுபிடிப்புகளும் 1874-ம் வருடத்திற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டவைகள். மின்சாரம், தொலைபேசி, இணையதளம், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள், பிரிட்ஜ், வாகனங்கள், ஏரோபிளேன், அணு ஆயுதங்கள், தொலைபேசிகள் - இவையனைத்தும் நம்முடைய ஆண்டவரின் வருகையை உறுதிப்படுத்துகிறது. இன்று மனுஷனுடைய அறிவு, ஒவ்வொரு 1½-2 வருடங்களுக்குள் இரட்டிப்பாகிறது.

மிக முக்கியமாக, "அறிவின் பெருக்கம்" மற்றும் "அங்கும் இங்கும் ஓடி" என்ற காரியங்கள் தேவனுடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கான தேடுதலைக் குறிக்கிறது. "அப்பொழுது அவர்கள் கர்த்தருடைய வசனத்தைத் தேட அலைந்து திரிந்து போவார்கள்" (ஆமோ. 8:12). இதற்கான முயற்சிகள் நம்முடைய ஆண்டவர் வருவதற்கு முன்னதாகவே துவங்கப்பட்டது. இவைகள் வேதாகம படிப்புகளை ஒருமித்து நடத்த உதவிகளை ஏற்படுத்தி, சத்தியத்தின் அறிவை பரப்புவது பயனுள்ளதாக இருந்தது. இவைகள் அனைத்தும் நம்முடைய ஆண்டவர் பிரசன்னத்திற்கான ஆதாரங்கள்.

### நம்முடைய ஆண்டவரின் பிரசன்னத்திற்கான காலக்கணக்கு

இப்போது, நம்முடைய ஆண்டவரின் வருகைக்கான அடையாளங்கள் மிகத் தெளிவாகக் காணப்படுகிறது. 1870-ம் வருடங்களில் சகோ. ரஸலுக்கு இப்படிப்பட்ட ஆதாரங்கள் இருக்கவில்லை. ஆகவே, அவைகளுக்குப் பதிலாக அவர் வசனங்களைப் பயன்படுத்தி, காலதீர்க்கதரிசனங்களில் காலங்களை கணித்து, ஆண்டவருடைய பிரசன்னத்தைக் கணக்கிட்டார். ஓய்வு வருடங்களைப் பெருக்கி யூபிலி வருடத்தைக் கணக்கிடுவதினால், திரும்பக் கொடுத்தலின் காலத்திற்கு நிழலானக் காரியம் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் கொடுக்கப்பட்ட யூபிலி பிரமாணத்தில் இருப்பதை அவர் கண்டார் (லேவி. 25:8-10). யூபிலிகளின் எண்ணிக்கையைப் பெருக்கினால் திரும்பக்கொடுத்தலின் காலத்தின் துவக்கத்தைக் கணக்கிடலாம் என்று முடிவெடுத்தார். பாபிலோன் சிறையிருப்புக்கு முன் அநுசரிக்கப்பட்ட கடைசி யூபிலியின் தேதி முதல் 50 வருடங்களுக்காக 50 யூபிலி சுற்றுக்கள் அக்டோபர் 1874-ம் வருடத்தைக் குறிப்பிட்டது. இதுவே, திரும்பக்கொடுத்தலின் காலத்தின் துவக்கத்தைக் குறிக்கும் என்று சகோ. ரஸல் கூறினார். ஆகவே, நம்முடைய ஆண்டவரின் இரண்டாம் வருகையின் தேதி, அக்டோபர் 1874-ம் வருடமாகவே இருக்க வேண்டும் (அப். 3:19-21).

யூதர்களின் இரட்டிப்பான வருடங்களுக்குரிய தீர்க்கதரிசனமும், இந்தக் கருத்தை ஆதரிப்பதாக ரஸல் கண்டார் (சக. 9:12; ஏசா. 40:2). கிமு. 1812-ம் வருடம் யாக்கோபின் மரணம் துவங்கி கிபி. 33-ம் வருடம் வரைக்கும் 1845 வருடங்கள் இஸ்ரயேல், தேவனிடத்தில் இரக்கம் பெற்றார்கள். அதற்குச் சமமான வருடங்களாகிய 1845-ம் ஆண்டுகள் (1878-ல் முடிவடையும்) தண்டிக்கப்படுவார்கள். அதற்குப் பின் மீண்டும் அவர்களுக்கான இரக்கத்தின் காலம் துவங்கியது.

கணக்கிட்டப்படி, 1878-ம் வருடம் பெர்லின் தேசிய ஐக்கிய நாடுகள் பாலஸ்தீனாவில் நிலங்களை விலைக்கு வாங்கி அதில் குடியேறும்படிக்கு அனுமதி தந்து அப்போது முதன்முறையாகக் குடியேறி அதற்கு "பெட்டாடிக்குவா" என்ற இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டது. பவுல் மற்றும் பேதுருவின் வாக்கியங்களைக் கொண்டு சகோ. ரஸல் முடித்தார் (ரோ. 11:27; அப். 3:19-21). ஆகவே, நம்முடைய ஆண்டவரின் இரண்டாம் வருகையோடு திரும்பக் கொடுத்தலின் காலமும், இஸ்ரயேலுக்கு மீண்டும் கிருபையின் காலம் துவங்கும் என்று நாமும் கற்றுக்கொள்கிறோம்.

தானியேல் 12-ம் அதிகாரத்திலுள்ள காலத் தீர்க்கதரிசனங்கள் குறிக்கக்கூடிய காரியங்களை சகோ. ரஸல் கண்டறிந்தார்.

(1) முடிவு காலத்தின் துவக்கம் (தானி. 12:7, 1260 நாட்கள்).

(2) பரிசுத்த ஜனங்கள் மத்தியில் சுத்திகரிப்பின் வேலைகள் துவங்கியது (தானி. 12:10-11, 1290 நாட்கள்).


(3) தானியேல் தீர்க்கதரிசனங்கள் புரிந்துகொள்ளப்படக்கூடிய காலம் (தானி. 12:12, 1335 நாட்கள்).

இந்த மூன்று தீர்க்கதரிசன காலங்களும் ஒரே தேதியில் துவங்கியது என்று முடித்தார். மேலும், 1260 நாட்கள் கிபி. 1799-ம் வருடத்தில் நிறைவேறியது என்றும், 1335 நாட்கள் 1874-ம் வருடம் நிறைவேறும் என்றும் கூறினார். இனி மணவாளனுடைய வருகையில் எல்லாம் தெளிவாக வெளிப்படும் என்று பத்து கன்னிகைகளின் உவமை ஒப்பிட்டு சகோதரர் பேசினார். "அவர் அரைகட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார்" (மத். 25:6-7; லூக். 12:37). இந்தத் தீர்க்கதரிசனங்கள் நம்முடைய ஆண்டவர் 1874-ம் வருடம் வந்துவிட்டார் என்ற நம்பிக்கையை ஊர்ஜிதப்படுத்துகிறது. மேலும், படிப்படியாக வெளிப்படுத்தப்பட்ட இரட்சிப்பின் தெய்வீக திட்டத்தின் தரிசனங்கள் இந்த முடிவை உறுதிப்படுத்துகிறது. "ஆண்டவருடைய **பிரசன்னத்தைக்** குறித்த முன்னதாகவே காணப்பட்ட கண்ணோட்டத்தின்படி, தீர்க்க தரிசனமான அடையாளத்தில் சொல்லப்பட்ட 1335 நாட்களில் முடிவடைந்தது. மேலும், நாம் இந்த சுவிசேஷ யுகத்தின் "அறுவடைக்" காலத்திலும் மிகாயேல் (கிறிஸ்து) தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கக்கூடிய காலத்தைப் பற்றிய அறிவை அடைந்த ஒரு காலத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதே உண்மை." (உம்முடைய இராஜ்யம் வருவதாக).

### முடிவுரை

அறுவடை சத்தியத்தில் ஆண்டவரின் இரண்டாம் பிரசன்னமே ஒரு விசேஷித்த இரத்தினமாகும். இப்போது எல்லா விதமான சமய பிரிவுணர்ச்சியிலிருந்தும் நம்மை வெளியேறச் சொல்லுகிறது. நம்முடைய ஆண்டவரின் இரண்டாம் வருகையை நாம் புரிந்துகொண்டதினிமித்தம், இன்று நடக்கக்கூடிய காரியங்களை நாம் அறிந்துகொண்டு, நம்முடைய மீட்பு சமீபமாக இருப்பதினால் நம்முடைய தலைகளை உயர்த்துவோம் (லூக். 21:28).

# தேவனுடைய பரதீசில்



"பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்" (வெளி. 21:1).

Excerpts from Reprint 2832

பரதீசு, தேவனுடைய தோட்டம் என்ற பெயர், ஏதேன் தோட்டத்திற்குப் பொருத்தமானது நம்முடைய ஆதிப்பெற்றோர் கீழ்ப்படியாததற்கு முன் அந்தத் தோட்டத்தில் தேவனோடு இசைந்திருந்தார்கள். இதே வார்த்தையை ஆவிக்குரிய விதத்தில் பார்க்கும் போது, புதிய பூமி என்று அழைக்கப்படுகிறது. அப்போது, இரண்டாம் வருகையில் வந்திருக்கும் இயேசு, இழந்துபோன சகலத்தையும் திரும்பக் கொடுத்து அனைவரையும் ஆசீர்வதிப்பார். அதில் தெய்வீக இரக்கத்தைப் பெற்று நித்தியமாக ஜீவிப்பதற்கு தங்களையே நிரூபித்தவர்கள் பூரண நிலையை அடைவார்கள். தேவனுடைய திட்டத்தின் பல்வேறு அம்சங்களை தரிசனமாகக் காணும்படிக்கு இந்த பரதீசுக்கு பவுல், "எடுத்துச் செல்லப்பட்டார்" என்று வாசிக்கிறோம். ஏனெனில், அந்த நேரத்தில் இவைகளை சபை அறிந்துகொள்வதற்கு ஏற்றக்காலமாக இருக்கவில்லை - "அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்" (2 கொரி. 12:4). அற்புதமான பரதீசின் காட்சிகளைக் காண்பதற்கு யோவானும் எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால், இவர் சகலத்தையும் அடையாளமாகக் கண்டார். கண்டவைகளை எழுதி பதிவு செய்ய அவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. இந்நாள் வரைக்கும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாதபடிக்கு இந்தப் புத்தகம் காணப்பட்டாலும் தேவன் குறித்த காலத்தில் இந்தப் பாடத்திற்குள் தேவனுடைய ஜனங்கள் அவருடைய பரிசுத்த ஆவிக்குள் நடத்தப்பட்டு வருகிறார்கள். மேலும் காலம் சமீபமாக இருப்பதினால், "விசுவாச வீட்டாருக்கு" இது "ஏற்றக்கால சத்தியமாகக்" காணப்படுகிறது.

"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப்புசிக்கக்கொடுப்பேன்" (வெளி. 2:7) என்று நம்முடைய ஆண்டவர் இந்த பரதீசை முதலில் சொல்லப்பட்ட ஏதேன் என்ற பரதீசைக் குறிக்கும்படியாக ஒரு மொழியைப் பயன்படுத்துகிறார். ஏதேனிலுள்ள சகல விருட்சங்களும், ஜீவவிருட்சங்களாக இருந்தது. ஆனால், அவைகளின் மத்தியில் நன்மை தீமை அறியத்தக்க விருட்சமும் இருந்தது. தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இந்த விருட்சத்தின் கனியைப் புசித்ததினிமித்தமாகவே ஆதாமும் அவர் சந்ததியும் மரண தீர்ப்பை அடைந்தார்கள். ஏதேன் தோட்டத்தின் மத்தியில் காணப்பட்ட அந்த விருட்சம் ஜீவ விருட்சமாக இருந்தது. இக்காலத்தில் ஜெயங் கொள்ளுகிறவர்களுக்கு இந்த ஜீவவிருட்சத்தின் கனியை மிகுந்த திருப்தியோடு ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில் புசிப்பதற்கு முழு சுதந்தரத்தைக் கொடுப்பேன் என்று நம்முடைய ஆண்டவர் வாக்களித்திருக்கிறார். அப்போது, தெய்வீக அங்கீகாரம் இருப்பதால் இந்த அறிவு சாபமாக இல்லாமல் மிகுந்த பயனுள்ளதாகவும், ஆசீர்வாத மாகவும் இருக்கும். "மெய்யாகவே, மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன்; இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்" என்று நம்முடைய ஆண்டவர் மனந்திருந்தின கள்ளனிடம் இனி பூமியின் மேல் வரக்கூடிய இந்தப் பரதீசைக் குறித்தே பேசினார்.

இந்த பரதீசு, "மூன்றாம் வானம்" - " புதிய வானங்கள் மற்றும் புதிய பூமி" (2 கொரி. 12:2; 2 பேது. 3:13) என்று அப்போஸ்தலர்களால் ஆங்காங்கே குறிப்பிடப்படுகிறது. இவைகள் புதிய உலகங்களை அல்ல, அல்லது அநேகர் எண்ணுகிற படி ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்கப்பட்ட வானங்களும் அல்ல, மாறாக, வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்ட எல்லா பூமிக்குரிய ஒழுங்குகளும் கடந்துச் சென்ற முதலாம் உலகம் என்றும் இப்போதும் மிகுந்த உபத்திரவங்களினாலும், புரட்சிகளினாலும் அக்கினிப் போன்ற சோதனைகளினாலும் இனி அழியக்கூடிய உலக அமைப்புகளையும் எல்லா உலக ஆவியைப் பெற்ற ஆவிக்குரிய அமைப்புகளும் முழுமையாக அழியக்கூடிய இரண்டாவது உலகம் என்றும் பொருள்படுகிறது.

"அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்." இது மூன்றாவது வானங்களாகவும், மூன்றாவது பூமியாகவும் இருக்கும். (அல்லது புதிய பூமியும், புதிய வானங்கள் என்று அழைக்கப்படுகிறது). இக்காலத்து உலகத்தைவிட இது வேறுபட்டதாக இருக்கும். இப்போதிருக்கிற அநித்தியமான மற்றும் அபூரணமான நிலையைப் போல் இராமல், அங்கு சகல காரியத்திலும் நீதியே நிலைத்திருக்கும். இந்த "புதிய வானங்களில்" புதிய ஆவிக்குரிய வல்லமைகளும், மகிமையடைந்த சபையும்

வாசமாயிருப்பார்கள். ஆனால், இப்போதோ பெயர் கிறிஸ்தவ மண்டலம் கிறிஸ்து தங்களுடைய தலை என்று கூறிக்கொண்டு, "கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டு" (2 கொரி. 4:4), இந்த உலகத்தின் பிரபுவாகிய அந்திகிறிஸ்துவை மிகுதியாக வணங்குகிறார்கள் (எபே. 2:2).

"புதிய வானங்கள்" என்றால் தேவனுடைய சிங்காசனம் இருக்கக்கூடிய புதிய இடம் என்று பொருள் அல்ல, ஆனால் இது ஒரு புதிய நிலையையும், கிறிஸ்து மற்றும் மகிமையடைந்த சபையின் கட்டுப்பாட்டிற்குள் நடத்தப்படும் புதிய ஆவிக்குரிய நிலையைக் காட்டுகிறது. அதுபோல, "புதிய பூமி" என்பதும் வேறு ஒரு கோள் அல்ல, மாறாக புதிய ஒழுங்கைக் கொண்டிருக்கும் உலகமாகும். முன்பு இருந்த வானங்களும், பூமியும் இனி ஒருபோதும் இருப்பதில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வெகு சீக்கிரத்தில் முடிவடையக்கூடிய இந்த யுகத்தை நிறைவு செய்யக்கூடிய மகா உபத்திரவத்தின் காலத்தில் இன்று நாம் காணக்கூடிய சகல அமைப்புகளும் மொத்தமாக அழிந்துவிடும்.

"சமுத்திரம் இனி இருப்பதில்லை" கடல் கொந்தளித்துக்கொண்டிருக்கும் உலக ஜனங்களை அடையாளப்படுத்துகிறது என்று நாம் முன்னதாகப் பார்த்திருக்கிறோம். மேலும், நிலம் - சமுதாய ஒழுங்குகளாயும், மலைகள் - இராஜ்யங்களையும் அடையாளப்படுத்துகிறது. புதிய ஒழுங்கின் கீழ் அதாவது, புதிய வானங்கள் அல்லது ஆவிக்குரிய வல்லமைகளின் கட்டுப்பாட்டின் கீழ் சகலமும் முழுமைப் பெற்று திருப்தியாக இருக்கும். அதற்குப் பின் கொந்தளிக்கும் கடல் இராது. அதிருப்திகள் இருக்காது. சகலமும் ஒழுங்காகவும், சட்டங்களுக்கு உட்பட்டு நடைபெறும். இப்போதிருப்பது போல செல்வம், வல்லமை போன்ற வேறுபாடுகளின்றி புதிய பிரமாணத்தின் ஆட்சிமுறையின் கீழ் ஒவ்வொரு சிருஷ்டிக்கும் பாதுகாப்பான நீதி வழங்கப்படும்.

**புதிய எருசலேம்**

வசனங்களில் ஒரு பட்டணம் ஒரு அரசாங்கத்தை அடையாளப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, அடையாளமான பாபிலோன், "பூமியின் இராஜ்யங்களின் மேல் ஆளுகை செய்யும் மகா பட்டணம்" என்று அடையாளப்படுத்தப்படுகிறது. அடையாளமான புதிய எருசலேம் ஆயிரவருட ஆட்சியின் புதிய ஆவிக்குரிய இராஜ்யத்தைக் குறிப்பிடுகிறது. இது மனுஷனால் உருவாக்கப்பட்டதல்ல. இது மனுஷனால் வளர்க்கப்பட்டதுமல்ல. ஆனால், இங்கு சித்தரிக்கப்பட்டபடி இது பூலோகத்தை விட்டு தேவனிடத்திலிருந்து வரக்கூடியதாக இருக்கிறது. இந்த இராஜ்யத்திற்காகவே நம்முடைய ஆண்டவர், "உம்முடைய இராஜ்யம் வருக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக" என்று நமக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தார். அந்தப் பட்டணம் தன்னுடைய புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல இருக்கிறது என்று கூறப்படுகிறது. ஒரு பெண்ணுக்கு மணவாட்டியாக அலங்கரிக்கப்படுவதே உச்சக்கட்டமான அலங்காரம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். கூடுதலாக இந்த இராஜ்யம் வருங்காலத்தில் ஸ்தாபிக்கப்படும் என்பதையும் இது நமக்கு நினைப்பூட்டுகிறது. உபத்திரவத்திலும், சோதனைகளிலும் உறுதிப்படக்கூடிய விசுவாசத்தினால் தேர்வு பெறக்கூடிய பரிசுத்தவான்கள் இந்த இராஜ்யத்தின் நியாயாதிபதிகளாக இருப்பார்கள். இவர்கள் இராஜ்யத்தின் உடன் பங்காளிகளாக ஆட்டுக்குட்டியானவருடைய மனைவி என்றும், மணவாட்டி என்றும் அழைக்கப்படுகிறார்கள். "நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி, பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் என்னை ஆவியில் கொண்டுபோய், தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தைவிட்டுத் தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதை எனக்குக் காண்பித்தான்" (வெளி. 9-11) என்று வெளிப்படுத்துகிறவர் கூறி இந்தக் கருத்தை நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறார்.

மகிமையான இந்தப் பட்டணம் மாம்சீக கண்களுக்குப் புலப்படாது. கிறிஸ்து மற்றும் மகிமையடைந்த பரிசுத்தவான்களை இனி ஒருவரும் பார்க்கமுடியாது. மனித சாயலிலிருந்து ஆவிக்குரிய நிலையில் "மாறினவர்கள்" மட்டுமே இவர்களைக் காணமுடியும். ஆனால், புதிய ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டிருப்பதை இந்த உலகம் வெகு சீக்கிரத்தில் அறிந்துகொள்ளும். இது நீதியும், தெய்வீக வல்லமையும் நிறைந்ததாய் இருக்கும். நீதிமான்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். மற்றம் தீமை செய்கிறவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

**மகிமையடைந்த ஆலயம்**

நம்முடைய பாடத்தின் மூன்றாவது வசனம், இந்தப் பட்டணத்தை மற்றொரு அடையாளமான ஆலயத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிறது. இந்த ஆலயத்தை, "ஜீவனுள்ள கற்களாகிய"

பரிசுத்தவான்களைக் கொண்டும், "தூண்களைக்" கொண்டும் தேவன் இப்போது ஆயத்தப்படுத்துகிறார். ஏனெனில், இந்தப் பட்டணத்தில் (இராஜ்யம்) மனுஷரோடு தேவன் வாசம் செய்யும் வாசஸ்தலம் என்று குறிப்பிடுகிறது - இது தேவனுடைய ஆலயமாக இருக்கும். இஸ்ரயேலர்கள் ஆசீர்வாதங்களைப் பெறும்படி ஆசரிப்புக்கூடாரத்திற்குச் சென்றதுபோல, முழு மனுக்குலமும் தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அந்த ஆலயத்திற்கு வருவார்கள். ஆசரிப்புக்கூடாரம் மற்றும் ஆலயம் - இவை இரண்டுமே ஆன்மீக ஊழியத்தைக் காட்டுகிறது. இப்படியாக, ஆயிரவருட ஆட்சியில் அவருடைய சபையில் (கிறிஸ்து, தலை மற்றும் சரீரம்) மனுஷரோடு தேவன் வாசம் செய்வார். அவர்கள் அவருடைய ஜனங்களாக இருப்பார்கள்.

ஆயிரவருட ஆட்சி தேவனால் நேசிக்கப்பட்ட குமாரனுடையதாக இருந்தாலும், அது தேவனுடையதாக இருக்கும். ஏனெனில், தேவனுடைய குமாரனும், அவருடைய பங்காளிகளுமான சபை முழுமையாக பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி, அவருடைய முழு கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுவார்கள். மனுஷரைப் பொறுத்த வரையில் அனைவரும் தெய்வீக சித்தத்தின்படி செயல்படுவார்கள். பவுல் குறிப்பிடுகிற படி அண்டசராசரத்தில் இந்த இராஜ்யம் வேறுபட்டதாக இருக்கும். "எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகைசெய்யவேண்டியது. சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்" (1 கொரி. 15:24-25, 28).

எல்லாவற்றையும் கிறிஸ்து மற்றும் சபை செய்திட்டாலும், இவ்வனைத்திற்கும் பிதாவாகிய தேவனே காரணராக இருக்கிறார். அவரே எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றுமானவர். அந்த மகிமையான காலத்தில் கண்ணீரைத் துடைப்பது ஒரு தொடர் செயலாக இருக்கும். மனுஷனுடைய ஒவ்வொரு பலவீனங்களும் துவக்கத்தில் நீங்காது. ஆனால், இராஜ்யத்தின் பிரமாணங்களைக் கைக்கொண்டு ஜீவிக்கும்போது, காலப்போக்கில் அவைகள் அகன்றுவிடும். அப்போது, திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் மனுக்குலத்தை மரணத்திலிருந்து பரிபூரண ஜீவனுக்குத் தூக்கிவிடும். "அந்தத் தீர்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்முலமாக்கப்படுவான் என்றான். " (அப். 3:23).

மீதியிருக்கும் ஜனங்களைக் கொண்டு இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, அதன் வேலைகள் துவங்கப்படும் என்று வசனங்கள் போதிக்கிறது. மேலும், மரணத்தீர்ப்பின் கீழிருப்பவர்களுக்கு ஈடுபலியின் வழியாக சத்தியத்தின் அறிவும், திருந்தி வாழக்கூடிய வாய்ப்பும் கொடுக்கப்படும். அதை அங்கீகரிக்கக் கூடியவர்கள் மரணத்தீர்ப்பிலிருந்து உடனடியாக விடுவிக்கப்படுவார்கள். உடனடியாக அவர்கள் பரிசுத்தமான பெரும்பாதையில் பயணிக்க துவங்கி பரிபூரண நிலையை அடைவார்கள். "பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டார்கள். அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்; எந்த மனுஷன் திராட்சக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும். பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்" (எரே. 31:29-30; தானி. 12:2).

ஆயிரவருடத்தின் வேலைகள் முழுவதையும் சில வார்த்தைகளில் சுருக்கி "இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின." இந்த ஒரு அறிவிப்பு ஆயிரவருட ஆட்சியின் முடிவில் நிறைவேறும். அதற்கு முன் இது முழுமையாக நிறைவடையாது. ஏனெனில், யுகத்தின் முடிவு வரைக்கும் அபூர்ண நிலையின் சீர்திருத்தல் நடைபெறும். அப்போது, மனுக்குலம் படிப்படியாக உயர்வான நிலையை அடைவார்கள். நியாயத்தீர்ப்பினால் உயிர்த்தெழுப்பப்பட்டு, சீர்பொருந்தி ஒழுங்கிற்கு உட்படுத்தப்படுவார்கள் (யோவா. 5:28-29). அந்த யுகத்தின் முடிவிலும் கூட மிகுந்த சோதனைக்குரிய காலம் வரும் என்று காட்டப்பட்டுள்ளது. அந்நாளில், கட்டாயமாக நீதிக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்த வாழ்க்கை எந்தளவுக்கு அவர்களின் இருதயத்தில் செம்மையான மாற்றங்களை ஏற்படுத்தினது என்றும், அதன் ஆசீர்வாதங்களை அவர்கள் அனுபவித்து எந்தளவுக்கு நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுப்பார்கள் என்று அவர் அவருடைய முழு விருப்பம் வெளிப்படும்படியாக அனைவரும் கடுமையான சோதனைக்குள் பிரவேசிப்பார்கள் (வெளி. 20:7-8).

### "இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்"

நம்முடைய பாடத்தின் 5-ம் வசனமானது, ஆயிரவருடத்தில் முழு காரியங்களையும் தொகுத்துக் காட்டுகிறது. "இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்" என்று நம்முடைய ஆண்டவராம் இயேசு பூமியின் ஆளுகையில் அமர்ந்தவராகக்

கூறுகிறார். இந்த ஒரு வாக்கியம் வெறும் மரம் செடிகளுக்காக மட்டுமல்ல, நம்முடைய ஆண்டவர் மேற்கொண்டிருக்கும் - மனுக்குலத்தை சீர்படுத்துவதாகும். ஆதாமின் சந்ததி அனைவரும் சாதகமான சூழ்நிலையில் தெய்வீக சித்தத்திற்கு இசைவாக செயல்படுத்தும்படிக்கு அறிவிலும், அனுபவத்திலும் வளர்ச்சியடைவார்கள். ஆயிரவருட முடிவில் இந்த வேலை நிறைவுபெறும். அந்தத் தீர்க்கதரிசி போதகர் ஆளுநனரின் சட்டத்திற்கு செவிக்கொடுக்காத துன்மார்க்கர் அனைவரும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். மேலும், மனப்பூர்வமாகக் கீழ்ப்படியும் யாவருக்கும் ஆதியிலிருந்த தெய்வீக திட்டத்திற்கு இசைவாக பரிபூரண நிலைமைக் கொடுக்கப்படும்.

இரட்சிப்பு மற்றும் திரும்பக்கொடுத்தலின் வேலைகளை ஆசீர்வதிக்கப்பட்டவரும் பிதாவின் ஒரேபேரான குமாரனுமானவரே நடப்பிக்க வேண்டும் என்று பிதா விரும்பினார். அவர் பாடுபட்ட போதும் காண்பித்த கீழ்ப்படிதல் பிதாவோடு நித்தியமாகத் தரித்திருந்து, அவருடைய பிரதிநிதியாக இருப்பதற்குத் தகுதியுள்ளவர் என்பதை நிரூபித்தார். பிதாவாகிய தேவன் அவராலும், அவரைக் கொண்டும் சகலத்தையும் உண்டாக்கினார். ஆயிரவருட ஆட்சியில் விரும்பிக் கீழ்ப்படிபவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பார் - இது நிலையான வாழ்வின் சிறப்புரிமையாகும்.

ஆனால், அதற்காக அவர்கள் தாகத்தோடு இருக்க வேண்டும். அதை வாஞ்சிக்க வேண்டும். இலவசமாகக் கொடுக்கப்படும் பிரமாணங்கள், கட்டளைகள் இவைகளுக்குக் கீழ்ப்படியக் கூடிய விருப்பத்தை வெளிப்படுத்த வேண்டும். "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன்" என்று இயேசு மார்த்தாளிடம் கூறினார். மேலும், ஒருவர் இயேசுவை நம்பி அவரை விசுவாசித்தால் மரித்திருந்தாலும் ஜீவனோடு இருப்பர். மரண நிலையிலிருந்து தப்பி பரிபூரண ஜீவனைப் பெறுவர். ஆயிரவருடம் முடியும் வரையில் அவர் ஜீவனோடு இருப்பார். அவ்வாறே விசுவாசித்து ஜீவன் கொடுத்தவர் பேரில் நம்பிக்கை வைத்து அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கும் பட்சத்தில் அவர் என்றும் மரிக்கமாட்டார்.

மேலும், " ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்" என்று ஆண்டவர் கூறுகிறார். இங்குக் குறிப்பிடப்படுபவர்கள் சுவிசேஷ யுகத்தில் தேர்வு செய்யப்பட்ட மணவாட்டி வகுப்பார் அல்ல, மாறாக மத். 25-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட செம்மறி ஆடுகளாகும். ஆயிரவருட ஆட்சியில் மனுக்குலத்தில் இப்படிப்பட்டவர்கள் ஆண்டவரின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து அவருடைய ஆடுகளாக இருப்பார்கள். ஆயிரவருட ஆட்சியின் முடிவில் தேவனுடைய திட்டத்திற்கு இசைவாக, "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" என்று அவர்களுக்கு அழைப்பு கொடுக்கப்படும். நமக்காக ஆயத்தப்பட்டிருக்கும் இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதற்கு அவர்கள் அழைப்பைப் பெறவில்லை. மாறாக, அவர்கள் இந்தப் பூமியை சுதந்தரித்துக்கொள்வார்கள். ஆதாம் தன்னுடைய கீழ்ப்படியாமையினால் இழந்திட்ட அனைத்தும் திரும்பக் கொடுக்கப்படும். இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தினால் அனைத்தையும் விடுவித்து, ஆயிரவருட ஆட்சியின் முடிவில் பிள்ளைகள் அந்த இரக்கத்தையும், கிருபையையும் ஏற்றுக்கொண்டவர்களுக்கு அவர்களுக்கு முந்தின பூரணநிலை கொடுக்கப்படும். இப்படியாக, இவர்கள் குமாரர்களும் அவர்களுக்கு நித்திய பிதாவாய் இருப்பார் (ஏசா. 9:6).

## ஜொலிக்கக் கூடிய பரலோக பட்டணம்

இங்கு நம்முடைய பாடம் ஒரு பட்டணத்தைக் குறித்து சிந்திக்கிறது. மகிமையடைந்த சபை ஆயிரவருட ஆட்சியின் போது, இந்த வகுப்பார் "இராஜாக்களும் ஆசாரியர்களுமாக இருந்து ஒரு ஆயிரம் வருஷம் இந்த பூமியை அரசாளுவார்கள்" (வெளி. 5:10; 20:4). இந்த பட்டணத்து வகுப்பாருக்கு சூரியனும் சந்திரனும் தேவையில்லை என்று சொல்லப்படுகிறது. சபை ஆவிக்குரிய ஜீவிகளாக இருப்பதினால் சொல்லர்த்தமாகவே இவர்களுக்கு சூரிய வெளிச்சமும், சந்திரன் வெளிச்சமும் தேவைப்படுகிறதில்லை. ஆனால், அங்கு சொல்லப்பட்ட காரியம் இதை பொருள்படுத்தாது.

சூரியனும் சந்திரனும் இங்கு அடையாளமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 12:1-ல் சொல்லப்பட்ட படி, சூரியன் சுவிசேஷ யுக வெளிச்சத்தையும், சந்திரன் யூத யுகத்தின் தீர்க்கதரிசிகள் மற்றும் நியாயப்பிரமாணத்தையும் குறிப்பிடுகிறது. மகிமையடைந்த சபைக்கு இக்காலத்து வெளிச்சம் அப்போது தேவைப்படாது. அப்போஸ்தலர் கூறுகிறபடி, அதைக் காட்டிலும் சிறப்பான மகிமையைப் பெற்றிருப்பார்கள். "இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்" (1 கொரி. 13:12).

இனி எந்தவிதமான திவ்ய இரக்கங்களை, ஆசீர்வாதங்களைப் பெறும் அறிவையும் மேலும் பெற இயலாத அளவுக்கு சபை தேவனுடைய நிறைவினால் நிறைந்திருக்கும் நீதியின் சூரியனிலிருந்து வெளிச்சம் பிரகாசிக்கிறது போல, சபையிலிருந்து தேவனுடைய மகிமையான ஒளி பிரகாசிக்கும். இந்த ஒளி ஆயிரவருட ஆட்சியில் மனுக்குலத்தை ஆசீர்வதித்து சொஸ்தப்படுத்தும். "அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" (மத். 13:43). இது நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் தலைமையில் நடைபெறும். இதே நீதியின் சூரியனைப் பற்றி மல்கியாவில் வாசிக்கிறோம். "ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்" (மல். 4:2). அனைத்தும் ஆண்டவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்றாலும் சபைக்குத் தலை கிறிஸ்துவாக இருந்தாலும் கிறிஸ்துவுக்கு தலை தேவனாக இருக்கிறார் என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளில் சொல்லப்பட்ட உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது.

நீதியின் சூரியன் பிரகாசிக்கும் போது, ஆரோக்கியமாக்கும் ஆசீர்வாதங்களும் புத்துணர்வையும் மன ரீதியான மற்றும் சரீர ரீதியான ஜீவனையும் கொடுக்கும். அப்போது, இந்த உலக மனுக்குலம் அதின் வெளிச்சத்தில் நடப்பார்கள். "பூமியின் இராஜாக்கள் அதில் மகிமை சேர்ப்பார்கள்" என்று வாசிக்கிறோம்.


"ஜாதிகள்" என்ற வார்த்தை ஜனங்களைக் குறிப்பிடுகிறது. இஸ்ரயேல் ஜனங்கள் மட்டுமல்ல, இந்த உலகத்திலுள்ள சகல ஜனங்களும் தேவனுடைய இராஜ்யத்தில் கிருபை பெறுவார்கள். ஆயிரவருட ஆட்சியில் "இராஜாக்கள்" என்று குறிப்பிடும் இவர்கள் கிறிஸ்துவின் கண்ணுக்குப் புலப்படாத பரலோக ஆவிக்குரிய ஆட்சியின் பிரதிநிதிகளாக இந்தப் பூமியில் இருப்பார்கள். முன்னதாக நாம் பார்த்தபடி ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் விசுவாசமுள்ள தீர்க்கதரிசிகள் அனைவரும் பிரபுக்களாக இருப்பார்கள். இவர்கள் பூலோக அழைப்பிற்கு முன் அதாவது, மணவாட்டியின் தேர்வு துவங்குவதற்கு முன் தாங்கள் தேவன் மேலுள்ள விசுவாசத்தை நிரூபித்தவர்கள். ஆகவே, நம்முடைய ஆண்டவர் இவர்களை முதலாவது உயிர்த்தெழுப்பி பரிபூரணமாக்கி இந்த பூமியின் மேல் பிரபுக்களாக வைப்பார். தேவன் மேல் அவர்கள் வைத்திருந்த அளவற்ற அன்பு மற்றும் விசுவாசத் திற்கு ஏற்ற பரிசுகள் வழங்கப்படும்.

"Bringing their glory into the city" இந்தப் பரலோக இராஜ்யத்தின் காரியங்களை முழுமையாக ஏற்றுக்கொண்டு, தேவனுடைய செய்கைகளாக இருக்கக்கூடிய அவர்களுக்கு நன்றிகளையும், கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்துவார்கள். இது ஆயிரவருடங்கள் முழுமையாக நடைபெறும். அப்போது பூமியின் மேல் எங்கும் பிரபுக்களாக இருப்பவர்கள் தங்களுடைய சொந்தப் பெயர்களைக் கொண்டோ அதிகாரத்திலோ அல்ல, மகிமையடைந்த கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக நீதியை ஸ்தாபித்து நியாயத்தீர்ப்பை வழங்குவார்கள் என்பதை ஜனங்கள் அறிந்துகொள்வார்கள். இதன் விளைவாக தங்களை மீட்டு இரட்சித்து சீர் பொருந்தினவரும், தேவனால் அபிஷேகிக்கப்பட்டவருக்கு கனத்தையும், மகிமையையும், துதிகளையும் ஏறெடுப்பார்கள். இதை 26-ம் வசனம் குறிப்பிடுகிறது.

மேலும், "தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்" என்று 27-ம் வசனம் குறிப்பிடுகிறது. "ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புஸ்தகத்தில்" கிறிஸ்துவின் உடன் பங்காளி அதாவது, இந்த யுகத்தில் தாங்கள் செய்த உடன்படிக்கைக்கு விசுவாசமுள்ளவர்களாக பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள் மட்டுமே இருப்பார்கள். விசுவாசமுள்ளவர்களுக்கு எப்படிப்பட்ட கூடுதலான மகிமை!

சபைக்காகவும், இந்த உலகத்திற்காகவும் தேவன் தந்திட்ட தெய்வீக மகிமையான காரியங்களைக் குறித்து நாம் புரிந்துகொண்டால் அவர் நமக்குக் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தங்களும், நன்கொடைகளும் நமக்குள் நல்லுணர்வுகளை ஏற்படுத்தும். இவைகளின் உதவியால் நம்முடைய வஸ்திரங்களை கறைதிரையில்லாமல் பாதுகாத்துக் கொள்கிறோம். அதாவது, எந்த ஒரு மாம்சமான அசுத்தங்களும் நம்முடைய வஸ்திரங்களை அழுக்காகாதபடிக்கு அவைகளை வெறுத்து அந்த கறைகளை நம்முடை வஸ்திரங்களிலிருந்து அகற்ற மனம்வருந்தி ஜெபிக்க வேண்டும். இப்படியாக, நாம் ஆண்டவருடைய அன்பில் நிலைத்திருந்து, "குறித்த காலத்தில் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்தில் பங்கடைவோம்."

# போதனைகள் எந்தளவுக்கு முக்கியம் வாய்ந்தது



"நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு" (தீத்து 2:1).

Excerpts from Reprint 5284

கிறிஸ்துவைப் பற்றிய போதனைகளின் சில அம்சங்கள் மிக முக்கியமானதும், அடிப்படையான துமாக இருக்கிறது. இவைகளின்றி ஒருவரும் ஆண்டவரின் சீஷர்கள் என்று கண்டுக்கொள்ளப்பட இயலாது. மற்ற சில அம்சங்கள் பயனுள்ளதாகவும், உபயோகமுள்ளதாகவும், ஆசீர்வாதங்களைக் கொடுக்கக்கூடியதாக இருந்தாலும் அவைகள் கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்களாக மாறுவதற்கு அவசியமில்லாதவைகளாகக் காணப்படுகிறது. பெந்தெகொஸ்தே நாள் துவங்கி இந்நாள் வரைக்கும் இப்படிப்பட்ட அடிப்படையான சத்தியங்களைப் பரிசுத்தவான்கள் உட்கொண்டு மகிழ்ந்து வருகிறார்கள்.

இதே வகுப்பாராக இருக்கும் நாமும் அதே அடிப்படையான சத்தியங்களைப் பெற்றிருக்கிறோம். மேலும், நாம் பெலப்படுவதற்காக, "காலத்திற்கேற்ற சத்தியங்களும்" மற்ற சத்தியங்களும் விசேஷித்த சிறப்புரிமைகளையும் பெற்றுக்கொள்ள அனுமதி பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்களாக மாறுவதற்கு கடைசியாகச் சொன்னக் காரியங்கள் அவசியமில்லை. ஏனெனில், இந்த சத்தியங்களைப் பெறாத நம்முடைய முற்பிதாக்கள் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருப்பதற்கு வாய்ப்பில்லாமல் போயிருக்குமே.

ஒப்புரவாகுதலின் அடிப்படையான கூற்றுகளைக் காணலாம்:

(1)எல்லா மனுஷரும் - ஆதாமின் அனைத்துப் பிள்ளைகளும் பாவிகளாக இருக்கிறார்கள்.

(2)இரட்சகரின் பலியின்றி ஒருவரும் தேவனோடு ஒப்புரவாக முடியாது.

(3)இயேசு தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்து இந்த உலகத்தின் பாவத்திற்காக அந்த பலியின் கிரயத்தை ஈடாக செலுத்தினார்.

(4)இரட்சகரின் வேலைகளின் மேலுள்ள விசுவாசத்தின் அடிப்படையில், "உங்கள் சரீரங்களை...ஜீவ பலியாக ஒப்புக்கொடுங்கள்" என்ற தெய்வீக அழைப்பை ஏற்றுக்கொண்ட விசுவாசிகள் தங்களையே தெய்வீக பணிக்கு அர்ப்பணித்துக்கொள்ளலாம்.

(5)இப்படி செய்வதினால் தங்களுடைய பலி தேவனால் அங்கீகரிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் ஜெநிப்பிக்கப்படும்படியாக தேர்வு செய்யப்பட்ட சபை ஜனங்கள் பூரணப்படும் வரையில் விசுவாசத்தின் உறுதியை முழுமையாக செயலாற்றுவார்கள்.

(6)இப்படிப்பட்ட விதிமுறைகளை சகோதரர்கள் மேன்மையான உணர்வுகளோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவரைக்கும் உள்ள காரியங்கள் எப்போதும் முக்கியமானவைகள் என்று தோன்றலாம், மேலும், இந்நாட்களில் இது அவசியம் இல்லை என்றும் நம்பலாம். ஆனால், சாதகமான நம்முடைய நாட்களில் அதிகமான அறிவைப் பெற்றிருக்கிறோம். அதற்கு ஏற்ற சோதனைகளையும் சந்திக்கிறோம். இதினிமித்தம் அதிகமான அறிவைப் பெறுவோம். குறிப்பிடப்பட்டிருக்கும் அடிப்படையான போதனைகளுக்கு அப்பாற்பட்ட காரியங்களை ஒருவர் மேல் ஒருவர் பாரமாக சுமத்திக்கொள்ள வேண்டாம் என்ற ஆலோசனையை நம்முடைய ஆண்டவர் எங்குமுள்ள அவருடைய ஜனங்களுக்குத் தருகிறார். ஒவ்வொருவரும் தன்னிச்சையாக நின்று, மற்றவர்களையும் தன்னிச்சையாக நிற்க அனுமதித்து, ஒருவரோடு முடிந்தவரையில் ஐக்கியப்பட்டிருக்கலாம்.

நாம் எந்த ஒரு நபருடைய கண்ணோட்டத்தையும் குறைச் சொல்லவில்லை. ஒவ்வொருவரும் வேதாகமம் போதிக்கக்கூடியது இன்னதென்று விசுவாசத்தைப் பற்றிக்கொள்வதற்கு நியாயமான உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். மேலும், நம்முடைய கண்ணோட்டங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நம்முடைய வாசகர்கள் அறிந்திருக்கிறார்கள். சுருக்கமாகச் சொல்லப்போனால்:-

(1) பாவம் செய்த ஒருவர் ஆதாம். அவரால் அவருடைய முழு சந்ததிகளும் பாதிக்கப்பட்டார்கள்.

(2) அவர்களுக்கு ஒரு இரட்சகர் தேவைப்பட்டார். இயேசுவே அந்த இரட்சகராக வந்து, "தன்னுடைய ஜீவனை ஈடுபலியாக அனைவருக்கும் கொடுத்தார்."

(3) மீட்கப்பட்ட சில பாவிகளை தேவன் அழைத்திருக்கிறார் - கிரயத்திற்காக ஈடுபலி செலுத்த வேண்டுமென்று இல்லை. அல்லது ஒருவரையும் இரட்சிப்பதற்காகவும் இல்லை - இரட்சகரோடு ஐக்கியப்பட்டு அவருடைய சரீர அங்கத்தினர்களாகிய மணவாட்டியாக இருப்பதற்கு அழைத்திருக்கிறார்.

(4) இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் ஐக்கியப்பட்டிருப்போருக்கு இயேசு பரிந்து பேசுகிறவராக இருந்து, அவர்களை தன்னுடைய சரீரத்தின் சரீரமாக ஏற்றுக்கொண்டு அவருடைய ஈடு ஆதாமின் சந்ததியை மீட்பதற்குப் பயன்படுத்தப்படும் கிரயத்தின் நன்மைகளில் பங்களிப்பார். அதற்குப் பின் அவர்கள் தங்களுடைய பலவீனங்களிலிருந்தும், குறைகளிலிருந்தும் சட்டப்பூர்வமாக நீதிமான்களாக்கப்படுவார்கள். அதற்குப் பின் மீதியிருக்கக் கூடிய வல்லமைகள், தாலந்துகளை தேவனுடைய சித்தம் செய்வதற்காக அர்ப்பணிக்கும் போது, அவர்களின் ஜீவபலி தேவனால் அங்கீகரிக்கப்படலாம் - மகா பிரதான ஆசாரியரால் பாவநிவாரண காணிக்கையில் பங்குப்பெறுவார்கள்.

(5) இப்படியாக, இரட்சகரின் மரணத்தில் பங்கெடுப்பவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலின் வழியாக அவருடைய ஜீவனிலும் பங்கெடுப்பதற்கு உரிமை பெறுவார்கள். புதிதாக சத்தியத்தை ஏற்றுக்கொண்டவர் மற்றும் சேர்க்கப்பட்ட அங்கத்தினர்களைத் தவிர இரட்சகர் இப்போதே இந்த உலகத்திற்கு தன்னுடைய ஈடுபலியினால் பெற்ற கிரயத்தைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார். அவர் இந்த தெய்வீக திட்டத்தை நிறைவேற்றி தன்னுடைய சரீர அங்கத்தினர்களின் பலியை ஒப்புக்கொடுத்து இந்த யுகத்தின் முடிவில் இந்த முழு உலகத்தின் பாவங்களின் சார்பாக தம்முடைய பலியைச் செலுத்தி... இவ்விதமாய் அவர்களுக்காக புதிய உடன்படிக்கை ஏற்படுத்துவார்.

நம்முடைய நியாயத்தீர்ப்பில் அநேகர் சபையின் பலிக்கு அதிகமான மதிப்பைக்கொடுப்பதின் நிமித்தமாக தவறுகள் செய்யப்படலாம். அதேநேரத்தில் மற்ற சகோதரர்கள் சபையின் பலிக்கு எந்த மதிப்பையும் கொடுக்காமல் தவறு செய்யலாம். அல்லது, அனைவருக்கும் செலுத்தப்பட்ட ஆண்டவரின் பலியில் சபை பங்கு பெறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்றும் எண்ணலாம். நம்முடைய கண்ணோட்டம் சுவற்றில் மாட்டியிருக்கும் கடிகாரத்தின் பெண்டுலத்தைப் போல, ஒரு முனை துவங்கி மற்றொரு முனை வரைக்கும் அலைப்பாய்கிறது போல தோன்றலாம். ஆனால், நாம் இந்த காரியத்தைக் குறித்து குறிப்பிட்டபடி நம்முடைய பார்வை அதன் மத்தியில் உள்ளது.

# உக்ரேனில் பிரச்சனை

"அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அறிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை" (மீகா 4:3).

ரஷ்யா நாட்டு கூட்டரசு 1991-ம் வருடம் கலைந்துவிட்டதற்குப் பின் உக்ரேன் சுதந்தரத்தை அறிவித்தது. கிரிமியா புதிய சுதந்தரம் பெற்ற உக்ரேனின் ஒரு பகுதியானது. இது ரஷ்யாவில் பதற்றத்தை ஏற்படுத்தியது. ரஷ்யாவில் கருங்கடல் கப்பற்படை தீபகற்பத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. கூடுமானளவு மேலோட்டமான ஆயுதம் தரித்த சிறு போர்கள் நடந்தது. நாடு கடத்தப்பட்டிருந்த கிரிமியன் இனத்தார் மீண்டும் குடியேறுவதற்குத் திரும்பினார்கள். உக்ரேனின் அரசியல் அமைப்பு சில சுயாதீனமானக் காரியங்களுக்கு அனுமதித்தது. மேலும், அந்தத் தொகுதியில் பாதிப்புகள் ஏற்படாதபடிக்கு உள்ளூரில் இருக்கும் ஒரு வகுப்பாரை அவர்களோடு வாணிகம் செய்யவும் அனுமதித்தது. தேசிய இராணுவம் சர்வதேசிய மற்றும் தேசிய பொருளாதாரக் கொள்கைகளை செயல்படுத்துவதற்கான உரிமைகளையும் கிவ்ஸ் தேசிய பாராளுமன்றம் அந்த முழு தேசத்திற்குக் கொடுத்தது. இந்தக் காரியம் உக்ரேனின் தேசிய பாராளுமன்றத்தை மற்ற ஐரோப்பிய பாராளுமன்றத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்படி செய்தது. ஆனால், தாழ்நிலையிலிருந்து கிரிமியாவின் உரிமைகள் அமெரிக்காவிலுள்ள ஒரு மாநிலத்தோடு ஒப்பிடப்பட்டுள்ளது.

பிப்ரவரி 26-ம் தேதி அன்று உக்ரேனில் நடந்த புரட்சியில் Kremlin, backed, Viktor Yanukovych என்பவரை ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கப்பட்ட போது அதைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான pro-ரஷ்யர்களும், pro-உக்ரேனியர்களும் சிம்பரோபோலில் உள்ள பாராளுமன்ற கட்டிடத்திற்கு எதிராக புரட்சிகரமாக மோதிக்கொண்டனர். இதை ரஷ்ய அதிபராகிய விலாடிமிர் புட்டின் குறுக்கிட்டு சட்ட விரோதமாக ஒரு புதிய ஆட்சியை அறிவித்தார். கிரிமியாவின் மேலுள்ள புதிய அரசாங்கத்தின் உரிமைகள் அல்லது அதிகாரங்களுக்கு எதிராக கேள்விகளை எழுப்பி ரஷ்யர்கள் தேசம் ஒன்றாகவே இருக்கிறது என்றும், எந்தச் செயலும் அதனுடைய சுதந்தரத்தைப் பறிக்காது என்றும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவும் கூறிக்கொண்டது. ரஷ்ய படையானது, மிகுந்த சீற்றத்துடன் கிரிமியாவின் பாராளுமன்றத்தின் கட்டிடத்தை முடக்கினார்கள். உக்ரேன் அரசியல் அமைப்புக்கு எதிராக தங்களுடைய சொந்த விதியை அங்கு குடியிருப்புக்கு ரஷ்யர்கள் தீர்மானித்துக் கொள்வதற்காக ஒரு தேதியில் முடிவெடுக்கும் படி பாராளுமன்றம் வாக்கு ஆதரவளித்தது. உள்நாட்டு கலவரத்திற்கு, ரஷ்யா மற்றும் மேற்கத்தியத்திற்கும் இடையில் கடுமையானப் பிரச்சனை எழும்புவதற்கு இதுவே காரணமாக இருந்தது. இருப்பினும் ரஷ்யாவோடு போர் புரியக்கூடிய பிரச்சனைகள் ஏற்படக்கூடிய நிலையற்ற நிலையை எண்ணி ஒருவரும் பயப்படவில்லை. ஏன்?

1991-ம் வருஷம் முதல் ரஷ்யாவின் பொருளாதாரம் ஆற்றல் மிக்க தொழிற்சாலைகளின் மேல் மீண்டும் உருவாக்கப்பட்டது. எல்லா ஏற்றுமதிகளிலும் பாதிக்கு மேல் எண்ணெயும், இயற்கை வாயுவும் ஏற்றுமதி செய்யப்பட்டது. சர்வ தேசிய Monetary Fund’s mission தலையான Antonio Spilimbergo என்பவர், "இன்றைய" உலகளாவிய பொருளாதார சூழ்நிலையை நிறைவு செய்ய அதிகபட்சமான மாற்றப்பட்ட பொருளாதார வடிவமைப்புகள் ரஷ்யாவும் மிக அவசியம் என்று கூறினார். ரஷ்யாவின் வியாபார கூட்டணியின் வளர்ச்சிக்காக புட்டின் 45 மில்லியன் உக்ரேன் பிரஜைகளைப் பிடித்திருந்தார். "பொருளாதாரத்திற்காக புட்டின் கவலைப்பட்டாலும், ரஷ்யாவின் நலனுக்காக அதிகமாகக் கவலைப்பட்டார். முன்னாள் ஒற்றனாக இருந்த புட்டின் இந்த பிரமாண்டமான ரஷ்யா பற்றிய எண்ணங்களைக் கொண்டிருந்தார். அரசியல் சூழ்நிலையில் ரஷ்யாவின் முக்கியத்துவம் குறைந்ததை அவர் ஏற்றுக்கொள்வதில்லை" என்று Ganske கூறுகிறார்.

### WWI-குப் பின் ஒரு புதிய உலகம்

இந்த உலகத்தின் மாபெரும் சக்திகள் பிரச்சனைகளை செய்வதற்கு இன்று ஆயத்தமாக இருப்பதை சில அறிகுறிகள் காட்டுகிறது. பிரிட்டிஷ் வரலாற்று ஆசிரியராகிய, டி. மேக்ஸ் ஹேஸ்டிங்ஸ் என்பவர், இந்த உலகம் முதலாம் போரில் சரிந்தது என்று பல ஆய்வுகள் காட்டுகிறது என்று "Catastrophe" அவர் சமீப காலத்தில் எழுதின புத்தகத்தில் எழுதினார். அதில், மேற்கத்தியர்களுக்கு யுத்தத்திற்கான எந்த விருப்பமும் இல்லை என்கிறார்.

மேலும், ரஷ்யாவின் வரம்புக்கு உட்பட்ட வல்லமைப் பற்றிய பொதுவான உணர்வுகளை புட்டின் பெற்றிருந்தார். 1990-ம் வருடத்திலிருந்து முதல்முறையாக இயற்கையாகவே 143 மில்லியனாக ஜனத்தொகை உயர்ந்தது. ஒரு நூற்றாண்டிற்கு முன் இதற்கு எதிரிடையாக பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பானியா, போர்ச்சுக்கல், இத்தாலி, நெதர்லாந்து, ஜெர்மனி, டென்மார்க் மற்றும் ரஷ்யா அகன்ற குடியேற்ற நாடுகளை சொந்தமாகக் கொண்டிருந்தது. வளர்ந்துக் கொண்டிருக்கும் வல்லமை அமெரிக்காவை ஒரு குழுவாக இணைத்தது. முதலாம் உலகப்போர் பேரரசுகள் இடையில் ஏற்பட்ட இறுதியான போராட்டமாக இருந்தது. அதன் விளைவாக பூமியில் பிரிவுகள் ஏற்பட்டு குடியேறிய நாடுகள் வெற்றியடைந்தவர்களால் பிடிக்கப்பட்டு பங்கிடப்பட்டது. 1914-ம் வருடத்திலிருந்து இந்த போர்களின் காரணமாக சுமார் 100 முறைகள் இராஜ்யங்களில் எல்லைகள் மாற்றப்பட்டது.

**புறஜாதியாரின் காலங்கள்**

இந்தப் பூமியின் ஆளுகையின் துவக்கத்தில் ஆதாமிடம் கொடுக்கப்பட்டிருந்தது. "பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்" (ஆதி. 1:28). ஆதாம் தேவனுடைய கற்பனைக்குக் கீழ்ப்படியாமல் நன்மை தீமையின் கனியின் விருட்சத்தை அவர் புசித்தபோது, அந்த ஆளுகை அவரிடமிருந்து நீக்கப்பட்டது. ஆயினும், இந்த ஆளுகை மனுஷனுக்குத் திரும்பக்கொடுக்கப்படுவதற்கு ஒரு இரட்சகரை அனுப்புவதாக தேவன் வாக்களித்தார் (ஆதி. 3:15). அதற்குப் பின் இந்த இரட்சகரை அவருடைய சிநேகிதனாகிய ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கின் வழியாகத் தோன்றுவார் என்று தேவன் வாக்களித்தார். "உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி. 28:14). "ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்" (ஏசா. 11:1).

இந்தப் பூமியின் மேல் முழுமையான ஆளுகை செலுத்தும்படியாக மனுஷனை சீர்ப்படுத்துவதற்கு மாபெரும் இரட்சகரும், போதகரும், ஆளுனரையும் இது வாக்களித்தது. இப்படிப்பட்ட ஆளுகையைப் பெற்றுக்கொள்வதற்கு இஸ்ரயேல் காட்சிகளைக் கண்டது. ஆயினும், அந்த தேசத்தின் விருப்பத்தின்படி தேவனுடைய ஆட்சிக்குப் பதிலாக, இராஜாக்கள் ஆட்சி செய்தனர். இது மொத்தத்தில் தோல்வியடைந்து, புறஜாதி தேசங்களை சேவித்து, அவர்களுக்கு அடிமைகளானார்கள்.

"பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு; அது இனி முன்போலிராது; தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசே. 21:26-27). கடைசி இராஜாவாகிய சிதேக்கியாவின் நாட்களில் இந்தத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. வெகு சீக்கிரத்தில் இஸ்ரயேல் அடிமைகளாகச் சென்று, அவர்களின் கிரீடம் விழுந்தது. 2500 வருடங்களாக அவர்களின் ஆளுகை தள்ளப்பட்டது. தானியேலின் புஸ்தகத்தில் இந்தக் காலத்தைக் குறித்து நேபுகாத்நேச்சார் கண்ட அந்தச் சிலையின் தரிசனத்திலும் (தானி. 2:31-35) மற்றும் தானியேல் கண்ட நான்கு மிருகத்தின் சொப்பனத்திலும் சித்தரிக்கப்பட்டிருந்தது (தானி. 8).

**புறஜாதியாரின் ஆட்சியின் முடிவு**

மகா ஒட்டோமேன் சாம்ராஜ்யம், மத்திய கிழக்கின் மேலுள்ள ஆட்சியை கிரேட் பிரிட்டனிடம் ஒப்புவித்தபோது, முதலாம் உலகப்போரில் இஸ்ரயேல் மேல், புறஜாதிகள் செலுத்திய ஆதிக்கம் முடிவடைந்தது. 1914, நவம்பர் 9-ம் தேதி லண்டனில் குவில்டால் என்ற இடத்தில் பிரதம மந்திரி H. H. அஸ்குவித் தன்னுடைய பொது பேச்சில்:-

"ஐரோப்பாவில் மட்டுமல்ல, ஆசியாவிலும் ஒட்டோமேன் ஆளுகைக்கு நாங்கள் அல்ல, ஒட்டோமேன் அரசாங்கமே சாவு மணி அடித்தது. 1914-ம் வருடத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட இரட்சகராகிய இயேசு கிறிஸ்து ஜாதிகளையும், தேசங்களையும் முன்னதாகவே தனக்குக் கீழ்ப்படுத்துவதற்கான ஆதாரங்களை நாம் காணலாம் (சங். 2:8)."

பழைய உலக சாம்ராஜ்யங்களின் உடைத்தல் துவங்கப்பட்டது. முதலில் இஸ்ரயேல் தேசம் சீர்ப்படுத்தப்பட்டு வருகிறது. இதுவே, இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக பிதாவாகிய தேவன் தம்முடைய உலகளாவிய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் காலம் நெருங்கியிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

"ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின. அப்பொழுது தேவனுக்கு முன்பாகத் தங்கள் சிங்காசனங்கள்மேல் உட்கார்ந்திருந்த இருபத்துநான்கு மூப்பர்களும் முகங்குப்புற விழுந்து" (வெளி. 11:15-16). இயேசுவின் சீஷர்களும் அவரோடு இராஜ்யத்தில் ஆட்சி செய்வார்கள் என்று வசனங்கள் கூறுகிறது (வெளி. 1:6; 5:10).

இராணுவ ஆராய்ச்சிகள் பெருக்கம் மற்றும் தயாரிப்புக்காக உலக வளத்தை, பொதுஜனங்களின் அடிப்படை தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

"கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள்."

"திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்."

"அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை" (ஏசா. 2:2, 3, 4). அதற்குப் பின் நித்திய நித்தியமாக இனி போர் இராது!

அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல் காத்துக் அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். -மத். 27:36 மத். 27:36 மத். 27:36

அங்கே அமர்ந்து காவல் காத்தனர், அழகின் அழகையே காவல்காத்தனர்.
பற்கள் கடித்தே கூட்டம் கடந்தும், இரக்கம் இல்லா கண்கள்கொண்டும்,
உறைந்துபோன பார்வையுடனே, அங்கே அமர்ந்தே காவல் காத்தனர்.
அவரது ஆடை விலைமிகுந்தது, கறைகளும் தையலுமில்லாதிருந்தது.
உலகின் மாபெரும்பாவம் சுமக்கும் துன்ப மனிதனை காவல் காத்தனர்.
காரிருள் கதிரை மூடியபோதும், எல்லாம் முடிந்தது என்றபோதும்
அங்கே அமர்ந்து காவல் காத்தனர், அழகின் அழகையே காவல்காத்தனர்.
துன்புறும் உந்தன் பிள்ளைதன்னை இரக்கம் இல்லா கண்கள்கொண்டே
நான் உற்றுப்பார்க்கத் தடைகொண்டு வாரும், பரலோகத்தின் தேவனே இன்றே.
எதிரிகள் அவரை தூற்றியபோதும், உயிரின் இரத்தம் சிந்திய போதும்,
இருண்ட நாளும் முடிந்த போதும் அங்கே அமர்ந்தே காவல் காத்தனர்.
எனது மரணம் நிகழும் வரைக்கும் அவருக்கு வலிமை அமைதி சேர்க்க
தேவனே எனக்கு அன்பு இருதயம அளித்தே சமாதான புறாவாய் மாற்றும்.

- ஜி. டபள்யூ. செய்பர்ட்.